DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1513 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 4, 2025

# ஒன்றாரியோ மாகாணத்தில் மக்கள் ஆதரவுள்ள அரசியல் தலைவர்களுள் ஹரி ஆனந்தசங்கரி சிறப்பான ஒரு இடத்தில் உள்ளார்.

## அவரது தேர்தல் பிரச்சார அலுவலகத் திறப்பு விழாவில் பல மக்கள் பிரதிநிதிகள் புகழாரம்





”லிபரல் கட்சியின் நீண்ட கால அங்கத்தவரும் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியும் நான்காவது தடவை தேர்தலில் மக்கள் ஆதரவை வேண்டி நிற்பவருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் தேர்தல் பிரச்சாரத்தின் ஆரம்ப நாளில் நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம். அந்த வகைமயில் ஒன்றாரியோ மாகாணத்தில் மக்கள் ஆதரவுள்ள அரசியல் தலைவர்களுள் ஹரி ஆனந்தசங்கரி சிறப்பான ஒரு இடத்தில் உள்ளார் என்ற செய்தியை நாம் நாம் இங்கு பதிவு செய்கின்றோம்”

இவ்வாறு கடந்த 29-03-2025 அன்று ஸ்காபுறோவில் நடைபெற்ற ஹரி ஆனந்தசங்கரி அவர்களது தேர்தல் பிரச்சார அலுவலகத் திறப்பு விழாவில் உரையாற்றிய ரொறன்ரோ பெரும்பாகத்தில் அரசியல் பணியில் மக்கள் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பலர் புகழாரம் சூட்டினார்கள்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

# தமிழர்களின் இன, மத அடையாளங்களை உறுதிசெய்யுமாறு சிறீதரன் எம்.பி. கோரிக்கை!



ஈழத்தமிழர்களின் இன, மத அடையாளங்களை உறுதி செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடவுச்சீட்டுக்கான புகைப்படங்களை எடுக்கும் போது பெண்கள் நெற்றியில் பொட்டிடக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தை மேற்கோள் காட்டி, இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே சிறீதரன் எம்.பி மேற்குறித்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025

# உதயன் சர்வதேச விருது விழா 2025

UTHAYAN உதயன்

விருது

UTHAYAN AWARD

Uthayan International Awards-2025

**Date:** Saturday, June 14th, 2025

**Time:** 6:00 PM

**Venue:** The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4

## This Year's Awards Are:
## இவ்வருடத்திற்குரிய விருதுகள்

Uthayan Literary and Artistic Exuberance Award
Uthayan Inter-Communal Relationship Award
Uthayan Business Entrepreneur Award - Ontario
Uthayan Business Entrepreneur Award - Quebec
Uthayan Leadership Award
Uthayan Youth Icon Award
Uthayan Lifetime Achievement Award - Sri Lanka
Uthayan Lifetime Achievement Award - Tamil Nadu

For More Information: 416-732-1608 / 647-762-9512

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# யாழ் குடா நாட்டில் கவனயீனமான சாரதிகளால் பறிக்கப்படும் அப்பாவிகளின் உயிர்கள்

இலங்கை அரசின் கீழ் இயங்கிவந்த காவல்துறையானது யாழ்ப்பாண மண்ணில் செயற்படாமல் இருந்த காலப்பகுதியில் அன்றைய வாகனச் சாரதிகள் தண்டனைகளுக்குப் பயந்த வண்ணமே வாகனங்களை வீதிகளில் செலுத்திச் சென்றார்கள். விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் தமிழீழ காவல்துறையானது இயங்கியபோது கிளிநொச்சி பரந்தன் இயக்கச்சி போன்ற பகுதிகளில் காணப்பட்ட சாரதிகளுக்கான எச்சரிக்கை அறிவித்தல்களை அவர்கள் கவனமாகப் படித்து அதன் பிரகாரம் வாகனங்களைச் செலுத்தினார்கள்.
குறிப்பாக. பாடசாலை மாணவர்கள் மற்றும் முதியோர்கள் பெண்கள் போன்றவர்கள், சாரதிகளின் முறையற்ற வாகனம் செலுத்துதலினால் பாதிக்கப்படக் கூடாது என்பதை சாரதிகளே கவனித்து செயற்பட்டார்கள்.
ஆனால் இன்றைய நாட்கள் விடிகின்றன பின்னர் இருள் வந்து சூழ்ந்து கொள்கின்றது அந்த நாள் கழிகின்றது. ஆனால் அன்றைய நாளில் எத்தனை உயிர்கள்.

தமிழர் பிரதேசங்களில் வாகன விபத்துக்களில் பறிபோகின்றன என்ற விபரங்கள் வைத்தியசாலைகளிலும் பொலிஸ் நிலையங்களிலும் கணக்கிடப்படுகின்றன. இவற்றை மின்னூடகங்கள் உடனடியாக உலகெங்கும் பரப்பிவிடுகின்றன. ஆனால் விபத்துக்கள் சம்பவித்த காரணத்தால் தங்கள் உறவுகளை இழந்த வீடுகள் என்னென்ன காட்சிகள் இடம்பெறுகின்றன என்பதை அறிய செய்திகளைப் படிக்கும் எத்தனை பேர் அக்கறை கொள்கின்றார்கள் என்பதுதான் கேள்வி.
அந்தந்த வீடுகளில் "ஒப்பாரி" கேட்கின்றது. தமது தந்தையையோ அன்றி தாயையோ அன்றி மாமாவையோ இழந்து தவிக்கும் குழந்தைகள் மற்றும் பெண்கள் தங்கள் எதிர்காலம் எப்படியிருக்கப் போகின்றதோ என்று அங்கலாய்க்க ஆரம்பிக்கின்றார்கள்.

ஆனால் அந்த நேரத்தில். விபத்துக்களுக்கு காரணமான சாரதிகளை "தப்ப வைப்பதற்கு" பொலிஸ் நிலையங்களிலும் வைத்தியசாலைகளிலும் அரசாங்க அலுவலகங்களிலும் "பேரங்கள்" பேசப்படுகின்றன. எங்கள் மண்ணிலிருந்து செய்தியையும் ஒளிப்படங்களையும் பார்க்கும் போது நூற்றுக்கு எண்பது வீதமான சாரதிகள் மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்துவதாலேயே விபத்துக்கள் ஏற்பட்டு அப்பாவிகள் தங்கள் உயிர்களை இழந்து தங்கள் உறவுகளையும் தவிக்க விட்டுச் செலகின்றார்கள் என்ற தகவல்கள் வெளிவருகின்றன.

எமது மண்ணில் எத்தனையோ அரச அலுவலகங்கள் மக்களுக்காக இயங்குகின்றன. அங்கு கற்றவர்களும் பட்டதாரிகளும் அரசாங்கம் வழங்கும் ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு பணிசெய்கின்றார்கள். அவர்களில் சிலராவது இந்த வாகன விபத்துக்கள் இடம்பெறாது தவிர்ப்பதற்குரிய வழிகளை ஆராய வேண்டாமா? வடமாகணத்திற்குரிய ஆளுனரும் அங்கு உள்ள ஐந்து அரசாங்க அதிபர்களும் இந்த "உயிர்காக்கும் பணியின்" பக்கம் தங்கள் பர்ரவைகளைச் செலுத்த மாட்டார்களா என்ற கேள்வியோடு இவ்வாரக் கதிரோட்டத்தை நிறைவு செய்கின்றோம்!

**Basement For Rent**

Markham/Sheppard சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் 2 Bedroom கொண்ட Basement உடனடியாக வாடகைக்குண்டு. Utilities included. $1800.00 Please call 647-710-7577

Room for Rent on Simcoe St, in Oshawa. Rent $850.00






# கனடா அரசாங்கத்தின் நீதி அமைச்சராகவும் சட்டமா அதிபராகவும் நியமிக்கப்பெற்ற ஹரி ஆனந்தசங்கரி அவர்களை கௌரவித்த மொன்றியால் திருமுருகன் ஆலய நிர்வாகசபையின் பிரதிநிதிகள்

கனடிய செய்திகள் Canadian News




அண்மையில் கனடாவின் மத்திய அரசாங்கத்தின் நீதி அமைச்சராகவும் சட்டமா அதிபராகவும் புதிய பிரதமர் மார்க் கார்னி நியமிக்கப்பெற்ற ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களை கௌரவிக்கும் முகமாக மொன்றியால் அருள் மிகு திருமுருகன் ஆலய நிர்வாகசபையின் பிரதிநிதிகள் மூவர் 29ம் திகதி சனிக்கிழமையன்று மொன்றியால் மாநகரிலிருந்து ஸ்காபுறோவிற்கு வந்திருந்தார்கள்.

அன்றையதினம் நடைபெற்ற ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் தேர்தல் பிரச்சார அலுவலகத்தின் திறப்பு விழாவிலும் கலந்து கொண்ட அவர்கள் பின்னர் நீதி அமைச்சராகப் பதவியேற்றமை குறித்த பாராட்டு கேடயம் ஒன்றையும் வழங்கிக் கௌரவித்தனர்.

மொன்றியால் அருள் மிகு திருமுருகன் ஆலய நிர்வாகசபையின் பிரதிநிதிகளாகக் வருகை தந்திருந்த ஆலயத்தின் பிரதம குரு ஸ்ரீ ஐயா அவர்கள் மற்றும் ஆலயத்தின் இந்து பாடசாலையின் பொறுப்பாளர் வாகீசன் நடராஜா ஆகியோர் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களை மலர்மாலை அணிவித்தும் கௌரவித்தனர்.

மேற்படி வைபவத்தில் தமிழ்ச் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# விஞ்ஞான ஆராய்ச்சி திட்டங்களுக்கு நிதி வழங்குவதில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களை கனடாவின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி பின்பற்றுகின்றதா?



மக்களுக்கும் நாட்டுக்கும் பயனளிக்கும் முக்கிய திட்டங்களில் ஒன்றான விஞ்ஞான ஆராய்ச்சி திட்டங்களுக்கு நிதி வழங்குவதில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களை கனடாவின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி பின்பற்றுகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளதாக கனடாவின் “நேசனல் ஒப்சேவர்“ என்னும் ஆங்கில செய்தி ஊடகம் எழுதியுள்ளது.

மேற்படிச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது, அமெரிக்க அதிபர் டிரம்ப் அவர்களின் நிர்வாகம் காலநிலை மாற்றம் முதல் தொற்றுநோய்கள் வரை அனைத்திலும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சிகள் தொடர்பான திட்டங்களுக்கு நிதி வழங்குவதை நிறுத்தியுள்ளதால் கனடாவில் உள்ள விஞ்ஞானிகளும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

அமெரிக்க ஆராய்ச்சி நிறுவனங்களோடு இணைந்து ஆராய்ச்சி முயற்சிகளில் ஈடுபடும் கனேடிய பல்கலைக்கழகங்களும் மேற்படி திட்டங்களில் இணைந்து பணியாற்றும் பேராசிரியர்களும் விஞ்ஞானிகளும் வருமானத்தை இழந்துள்ளதாகவும் அத்துடன் இந்த நிதிக் குறைப்பான மனித குலத்திற்கு விரோதமானது எனவும் மேற்படி கனடாவின் “நேசனல் ஒப்சேவர்“ என்னும் ஆங்கில செய்தி ஊடகம் எழுதியுள்ளது. - மேலும் எங்களுக்கு நிதி குறைந்து போவதால், அறிஞர்கள் கவலைப்படுகிறார்கள், அமெரிக்காவைப் போன்று இந்த நிதிக் குறைப்பு கனடாவிலும் மேற்கொள்ளப்படுமானால் பின்விளைவு பாதிப்பாக இருக்கும் என்றும் கனடிய பல்கலைக்கழகங்களின் விஞ்ஞான பீடங்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். விளைவு பின்வாங்கக்கூடும்.

பல கனேடிய ஆராய்ச்சியாளர்கள் தங்கள் பணிக்கு நிதிஉதவிகளைப் பெறுவதற்காக அமெரிக்காவை நம்பியுள்ளனர், பெரும்பாலும் சர்வதேச திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் அல்லது அமெரிக்க நிதியைப் பெறும் அமெரிக்க சகாக்களுடன் ஒத்துழைப்பதன் மூலம். கனடிய விஞ்ஞானிகள் பயன்பெற்றனர். ஆனால் பதவியேற்ற சில வாரங்களில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மில்லியன் கணக்கான மதிப்புள்ள ஆராய்ச்சி நிதி ஒதுக்கீடுகளை குறைத்துள்ளார், குறிப்பாக காலநிலை அல்லது பாலினம் போன்ற பாடங்களில் - அவர் இந்த வெட்டுக்களை அமுல்படுத்தியுள்ளார்.

இதே போன்று கனடாவின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சித் தலைவர் பியர் பொய்லீவ்ரே கடந்த வாரம் வெளியிடப்பட்ட பெடரல் கன்சர்வேடிவ்களின் கியூபெக் தளம், கனடிய பல்கலைக்கழக ஆராய்ச்சிக்கான மத்திய அரசின் நிதியில் குறைப்புக்களை கொண்டுவர தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே கொன்சர்வேர்ட்டிவ் கடசியின் முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர்-அவர்கள்-2010 களில் நடத்திய ”விஞ்ஞானத்திற்கு எதிரான போர்” இந்த அறிவிப்பில் எதிரொலிக்கிறது என்றும் இது உலகளாவிய கண்டனத்தை ஈட்டியது என்றும் கனடாவின் “நேசனல் ஒப்சேவர்“ என்னும் ஆங்கில செய்தி ஊடகம் எழுதியுள்ளது.



# காங்கேசந்துறை நடேஸ்வராக் கல்லூரி கனடா — பழைய மாணவர்களின் குளிர்கால ஒன்றுகூடல்




- குரு அரவிந்தன்

கனடா, நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் 01-03-2025 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அகவணக்கத்தைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டது. மங்கள விளக்கை நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் காப்பாளர்களான எழுத்தாளர் குரு அரவிந்தன், ஊடகவியலாளரான பி. விக்னேஸ்வரன் ஆகியோர் ஏற்றி வைத்து நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர்.

அதைத் தொடர்ந்து கனடிய தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து நடேஸ்வரக்கல்லூரிக் கீதம் ஆகியன யமுனா சிறீதரன், வாசுகி கோகுலன், சின்னராசா தாசன், கிருஸ்ணபிள்ளை நீலவண்ணன் ஆகியோரால் பாடப் பெற்றன. ஜெனீக்கா டேவிட்சனின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து சங்கத் தலைவர் மார்கண்டு நிர்மலன் அவர்களின் உரை இடம் பெற்றது.

தொடர்ந்து காங்கேசந்துறை நடேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. பி. பாலகுமார் அவர்களின் பதிவு செய்யப்பட்ட காணொளி உரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் அதிபாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம் பெயர்ந்து மீண்டும் கட்டி எழுப்பப்பட்ட பாடசாலையின் முன்னேற்றம் பற்றியும், இதுவரை காலமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்ததால் மாணவர்கள் பற்றாக குறை பற்றியும் குறிப்பிட்டு, பாடசாலையைக் கல்வி சார்ந்து முன்னேற்றத் தேவையான அவசர தேவைகள் என்ன என்பதையும் குறிப்பிட்டார். மேலதிக விபரங்களை மகாலிங்கம் குமாரகுலதேவன் தனது உரையில் எடுத்துச் சொன்னார்.

தொடர்ந்து மேரி அசோக், சதானந்தபவன் வாகீசன், சின்னராஜா தாசன், ஆகியோரின் திரையிசைப்பாடல்கள் இடம் பெற்றன. அதன்பின் வைஸ்நவி நந்தீஸ்வரன், ஜெனீக்கா டேவிட்சன் ஆகியோரது நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. அதன் பின் இரவு விருந்து இடம் பெற்றது. பிரதம விருந்தினராக வரவிருந்த பழைய மாணவர் வல்லிபுரம் ஆனந்தலிங்கம் தவிர்க்க முடியாத காரணத்தால் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாமற் போய்விட்டது.

நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர்களின் சேவையைப் பாராட்டி அருளப்பு ரஞ்சன், சுந்தரம் சந்திரா, நடராஜா முரளிதரன், செல்வரட்ணம் பிரபாகரன், கோபால் உமைபாலன் ஆகியோர் விருது கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர். மன்றத்தின் செயலாளர் வாசுகி கோகுலனின் நன்றி உரையுடன் நிகழ்வு இனிதே முடிவுற்றது.








# பொதுப் போக்குவரத்து நடைமுறைகளை சீர்செய்யும் நடவடிக்கை கல்முனையில் ஆரம்பம்

இலங்கை செய்திகள் Sri Lanka News



(28-03-2025)

எதிர்வரும் நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரை புத்தாண்டுகளை முன்னிட்டுகிளின் சிறிலங்கா வேலை திட்டத்தின் ஒரு அங்கமாக கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொதுப் போக்குவரத்து நடைமுறைகளை சீர் செய்யும் நடவடிக்கை மார்ச் 28ம் திகதி வெள்ளிகிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கல்முனை பேருந்து நிலையம் பொது நூலகம் அம்மன் கோவில் வீதி தாள வட்டுவான் சந்தி நற்பிட்டிமுனை புறநகர் பகுதி கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை கல்முனை ஆதார வைத்தியசாலை வங்கிகள் தனியார் நிறுவனங்கள் கல்முனை மாநகர பகுதிகள் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை பகுதி கல்முனை மட்டக்களப்பு பிரதான வீதி ஆகியவற்றில் சட்டவிரோதமாக நிறுத்தி வைக்கப்படும் வாகனங்கள் உட்பட பாதசாரிகளுக்கு இடையூறாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோத விளம்பர பலகைகள் மற்றும் படிக்கட்டுகள் ஆகியவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை கல்முனை தலைமையக பொலிஸார் மேற்கொண்டதுடன் ஒலிபெருக்கி வாயிலாக அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

குறித்த நடவடிக்கைகள் யாவும் அண்மையில் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி கிழக்கு மாகாண புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தர கலந்துரையாடலின் பின்னர் கல்முனை பிராந்தியத்தில் கட்டம் கட்டமாக உரிய உரிய திணைக்களங்கள் கல்முனை மாநகர சபை என்பவற்றுடன் இணைந்து பொதுப் போக்குவரத்து விதிமுறைகள் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் இந்த நடவடிக்கையானது அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச். சமுத்திர ஜீவ கண்காணிப்பின் கீழ் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க ஆலோசனைக்கமைய கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார் வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்சீன் பக்கீர் தலைமையில் மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான பி.ரி நஸீர் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இப்பகுதிகளில் பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் போக்குவரத்து நெருக்கடியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் புதிய கட்டுப்பாடுகளை அமுல் படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தவிர கடந்த காலங்களில் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாடசாலையை விட்டு வீடு செல்லும் நேரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் மாணவ மாணவிகள் ஆசிரியர்களின் போக்குவரத்து சிரமங்களை தவிர்ப்பதற்காக போக்குவரத்தை சீர் செய்வதற்கு அண்மைக் காலமாக கலந்துரையாடல்கள் பல்வேறு மட்டங்களில் இடம் பெற்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.




# பொலிஸார் அடாவடித்தனத்தில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்கிறார் பவானந்தராஜா எம்.பி!



பொலிஸாரின் அராஜகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

மார்ச் 28ம் திகதி வெள்ளிக்கிமை அன்றையதினம் நடைபெற்ற சங்கானை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் பின் ஊடகவியலாளர் ஒருவர் "அண்மை காலமாக பொலிஸாரின் அடாவடிகள் அதிகரித்துள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் கூட பொலிஸார் நெல்லியடியில் ஒரு வீட்டுக்குள் சென்று அடாவடியில் ஈடுபடுகின்ற காணொளி வெளியாகி இருந்தது. இதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கின்றீர்கள்" என கேள்வி எழுப்பியவேளை அவர் இவ்வாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸாருக்கு போதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இருந்தாலும் பொலிஸார் சில இடங்களில் தாங்கள் நினைத்தபடிதான் நடந்துகொண்டு இருக்கின்றனர். அவர்களது செயற்பாடுகள் பிழையாக இருந்தால் அந்த பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் - என்றார்.





# வட்டுக்கோட்டை பொலிஸார் எங்கே என பிரதேச செயலகத்தின் கூட்டத்தில் எழுந்த சலசலப்பு!





சங்கானை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது மார்ச் 28ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, கால்நடைகள் விவசாய நிலங்களை அழிப்பது தொடர்பான விவாதம் எழுந்தது. இந்நிலையில் இது குறித்து நடவடிக்கை எடுக்க முற்படும்போது கால்நடைகளின் உரிமையாளர்களால் தாம் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகுவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் பொலிசாரின் பாதுகாப்பு செயற்பாடுகள் குறித்து கேள்வி எழுப்புவதற்கு பொலிஸாரை தேடியவேளை வட்டுக்கோட்டை பொலிஸார் பிரசன்னமாகாமை தெரியவந்தது. இந்நிலையில் சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

இந்நிலையில் வட்டுக்கோட்டை பொலிஸாரை தன்னை வந்து சந்திக்குமாறு கூட்டத்துக்கு தலைமை தாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா, பிரதேச செயலர் கவிதா உதயகுமாருக்கு தெரிவித்தார்.







# பிரித்தானியா மீது பிழை கண்டுபிடிக்க முன் நீங்கள் கூறியபடி புது அரசியலமைப்பு பணியை ஆரம்பியுங்கள் அமைச்சரே!

## இலங்கையின் வெளிநாட்டமைச்சரிடம் மனோ கணேசன் எம்பி கோரிக்கை

பிரிட்டன் அரசாங்கம் சார்பாக பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி அறிவித்த தடைகள், இலங்கையில் தேசிய நல்லிணக்க செயற்பாட்டை குழப்புகிறது என இலங்கை வெளிநாட்டமைச்சர் நண்பர் விஜித ஹேரத் கூறுகிறார். டேவிட் லெம்மி, தான் இதை தம் தேர்தல் பிரசாரத்தின் போது தந்த வாக்குறுதிகளுக்கு ஏற்பவே செய்துள்ளதாகவும் கூறுகிறார்.

இந்நிலையில் நண்பர் விஜித ஹேரத்திடம் நான் கேட்க விரும்புகிறேன். உங்கள் தேர்தல் பிரசாரத்தின் போது நீங்கள் உறுதியளித்த, அரசியலமைப்பு செயற்பாடு, இன்று எங்கே? இன்று இந்நாட்டில் இனவாதம் பகிரங்கமாக பேச படுவதில்லை. அதற்கு காரணம் ஜேவிபி அல்ல. அன்று நாட்டில் நடைபெற்ற "அரகல" என்ற போராட்டத்தின் போது, அதற்கு முன் கோதாபய ராஜபக்சவுக்கு வாக்களித்த பெரும்பாலான சிங்கள இளையோர், இனி இனவாதம் சரி வாராது என்று கை விட்டு விட்டார்கள். அது நல்லது. ஆனால், அது மட்டும் நிரந்தர நல்லிணக்கத்தை கொண்டு வராது. நிலைமை மீண்டும் மாறலாம். ஆகவே காலம் கடக்கும் முன், நீங்கள் உறுதி அளித்தபடி, நல்லாட்சியில் 2018 ஆண்டளவில் இடை நிறுத்த பட்ட, புதிய அரசியலமைப்பு செயற்பாட்டை, நின்ற இடத்தில் இருந்து முன்னெடுங்கள். அதை தானே நீங்கள் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில், பிரசாரத்தில் சொல்லி வாக்கு வாங்கினீர்கள்? அதை செய்யாமல், இன்று நடக்காத உங்கள் தேசிய நல்லிணக்க செயற்பாட்டை, பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி தடைகளை அறிவித்து குழப்புவதாக கூறுவது வேடிக்கை என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பில், தனது எக்ஸ் தளத்தில் மனோ கணேசன் எம்பி தெரிவித்ததாவது;

"பொறுப்பு கூற வேண்டியவர்கள் சட்ட விலக்கு பெற இடம் தர மாட்டோம்" என்ற தமது தேர்தல் பிரசார வாக்குறுதிக்கு அமைவாக, பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி, இலங்கையின் பிரஜைகள் நால்வருக்கு எதிராக அறிவித்த தடைகள் இலங்கையின் தேசிய நல்லிணக்க முயற்சிகளை குழப்புவதாக தனது "அங்கேயும் இல்லாத, இங்கேயும் இல்லாத" பதிலில் இலங்கை வெளிநாட்டமைச்சர் நண்பர் விஜித ஹேரத் கூறுகிறார்.

அமைச்சர் அவர்களே, உங்கள் தேர்தல் பிரசாரத்தின் போது நீங்கள் உறுதியளித்த, அரசியலமைப்பு செயற்பாடு, இன்று எங்கே? அதை உங்களை அரசு காலவரையின்றி ஒத்தி வைத்து விட்டது. நல்லாட்சியில் 2018 ஆண்டளவில் இடை நிறுத்த பட்ட, புதிய அரசியலமைப்பு செயற்பாட்டை, நின்ற இடத்தில் இருந்து முன்னெடுப்போம் என்பது உங்கள் தேர்தல் கால வாக்குறுதி. ஜனாதிபதி அனுரகுமார உடன், அந்த புதிய அரசியலமைப்பு வழிகாட்டல் குழுவில் நான், நண்பர்கள் ரவுப் ஹக்கீம், ரிஷாத் பதுர்தீன், சுமந்திரன் ஆகியோர் கூட்டாக செயற்பட்டோம்.

ஆகவே காலதாமதம் ஏற்பட முன், உடனடியாக புத்திய அரசியலமைப்பு பணியினை ஆரம்பித்து தேசிய நல்லிணக்க இலங்கை அடையுங்கள். அதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நீங்கள் தர கூடிய சரியான பதிலாக இருக்க முடியும். இவ்வாறு மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

# ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்பெறும் உப்பின் அடையாளப் பெயரை உறுதிசெய்யுமாறு சிறீதரன் எம்.பி கோரிக்கை



ஆனையிறவு உப்பு என்னும் அடையாளப் பெயரை உறுதிசெய்யுமாறு கோரி, நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி அவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வடக்கு மாகாணத்தின் கைத்தொழிற் பொருளாதார அடையாளங்களுள் ஒன்றான ஆனையிறவு உப்பளத்தை மீள ஆரம்பித்தமை காலத்தேவையான செயற்பாடாகும். 1937ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளத்தில் 1938 ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஏறத்தாழ ஒன்பது தசாப்த பாரம்பரியம் மிக்க ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகள் இன்றுமுதல் (29) மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளித்தாலும், "ஆனையிறவு உப்பு" என்ற அடையாளப் பெயர் "ரஜ லுணு" என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கிடைக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

வடக்கு மாகாணத்தின் கைத்தொழிற் பேட்டைகளுள் முதன்மையானதும், முக்கியத்துவம் மிக்கதுமான ஆனையிறவு உப்பளம் என்பது எமது மக்களின் அடிப்படை வாழ்வியலோடு இணைந்த ஓர் அடையாளம் ஆகும். அத்தகையதோர் கைத்தொழிற் கட்டமைப்பை மீள ஆரம்பிக்கும் போது அதன் அடிப்படை அடையாளத்தை மாற்றம் செய்கின்றமை தங்கள் அரசாங்கத்தின் மீதான அபிமானத்தையும், இன நல்லிணக்கம் குறித்த தங்களின் சிந்தனைப் போக்கையும் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளது.

குறிப்பாக, கடந்த காலங்களில் இனத்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அடையாளத் திணிப்புகளைப் போலவே, எமது மொழியியல் அடையாளத்தை சிதைத்து, பெரும்பான்மையினத்தின் தனித்துவத்தை வலிந்து புகுத்தும் இன மேலாதிக்கச் செயற்பாடாகவே இதனையும் கருத வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

கடந்த 2025.03.18 ஆம் திகதி, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 22.7 இன் கீழ், ஆனையிறவு உப்பளம் குறித்து பாராளுமன்றில் நான் கேள்வி எழுப்பியபோது வலியுறுத்தியதற்கு அமைவாகவும், எமது மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்பவும் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை "ஆனையிறவு உப்பு" என்ற பாரம்பரிய பெயருடனேயே விற்பனை செய்வதை உறுதிசெய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

# யாழ்ப்பாணம் சிறையில் இருந்த கணவனுக்கு உணவு கொண்டு சென்ற மனைவி விபத்தில் சிக்கி மரணம்!

யாழ். சிறைச்சாலையில் இருந்த கணவனுக்கு உணவு கொண்டு சென்ற மனைவி ஒருவர் விபத்தில் சிக்கிய நிலையில் இன்று மரணமடைந்துள்ளார். இதன்போது கைதடி - தச்சன்தோப்பு பகுதியைச் சேர்ந்த ஜெயரத்தினம் சுசீலா (வயது 57) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண், கடந்த 13ஆம் திகதி சிறையில் உள்ள தனது கணவனுக்கு உணவு கொடுப்பதற்காக கைதடி வீதியால் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்தார். இந்நிலையில் அதே வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குறித்த பெண் சிகிச்சை பலனின்றி 30-03-2025 அன்று மதியம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உலக செய்திகள் World News

# ஆயுஷ் அமைச்சகம் தன்வயப்படுத்தி அழிக்க முயலும் தமிழ்ச்சித்த மருத்துவ நூல்களை தமிழ்நாடு அரசு பாதுகாக்க வேண்டும்!



## நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் வேண்டுகோள்

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இந்திய ஒன்றிய அரசின் ஆயுஷ் அமைச்சகம் கடந்த 07.02.2025 அன்று வெளியிட்டுள்ள பாரம்பரிய மருத்துவ நூல்கள் பட்டியலில் 227 ஆயுர்வேத நூல்கள், 112 யூனானி நூல்கள் 88 தமிழ்ச்சித்த நூல்கள் இடம்பெற்றுள்ளன. 250க்கும் மேற்பட்ட தமிழ்ச்சித்த மருத்துவ நூல்கள் இப்பட்டியலில் இடம்பெறாமல் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளது வன்மையான கண்டனத்துக்குரியது.

இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு மொழி பேசும் தேசிய இனங்கள் வெவ்வேறு கலை, இலக்கியம், மருத்துவம், பண்பாட்டு மரபுக்கூறுகளைக் கொண்டுள்ளன. அவை அனைத்தையும் அழித்து, ஒற்றை மயமாக்கி, இந்தியாவை இந்தி பேசும் மக்களுக்கு மட்டுமான நாடாக்க தொடர்ந்து பல்வேறு அழித்தொழிப்பு நடவடிக்கைகளை இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு மேற்கொண்டு வருகிறது. இந்தி - சமஸ்கிருதத்தை வலிந்து திணித்து மாநில மொழிகளை அழிக்க முயலும் பாஜக அரசு, அதன் அடுத்த படிநிலையாக மருத்துவம் உள்ளிட்ட தேசிய இனங்களின் தனித்துவ மரபுக்கூறுகளையும் தற்போது அழித்தொழிக்கத் தொடங்கியுள்ளது. ஆயுஷ் அமைச்சகத்தின் பட்டியலில் 88 தமிழச்சித்த மருத்துவ நூல்கள் மட்டுமே பட்டியலில் இருக்க, ஆயுர்வேத நூல்களின் எண்ணிக்கை அதைவிட மூன்று மடங்கு அதிகமாக இடம்பெற்றிருப்பது எப்படி? இதிலிருந்தே 250 தமிழ்ச்சித்த நூல்கள் நீக்கப்பட்டிருப்பது திட்டமிட்டச்சதி என்பது உறுதியாகிறது.

சமஸ்கிருத மொழியில் உள்ள நூல்கள் மட்டுமே ஆயுர்வேத நூல்களாகக் கருதப்பட்டுவந்த நிலையில், தற்போது அக்கட்டுப்பாட்டை நீக்கியுள்ள ஆயுஷ் அமைச்சகம் பிற மொழிகளில் உள்ள நூல்களையும் ஆயுர்வேதத்தில் சேர்த்துள்ளது. அதே சமயம் பிறமொழிகளில் இல்லாது, தமிழில் மட்டுமே இருக்கின்ற நூல்கள் மட்டுமே தமிழ்ச்சித்த மருத்துவ நூல்களாக ஏற்றுக்கொள்ள முடியும் என்ற கட்டுப்பாட்டையும் விதித்துள்ளது. இதன் மூலம் மலையாளம், தெலுங்கு, மராத்தி, இந்தி மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்ட சித்த மருத்துவ நூல்கள் இனி தமிழ்ச்சித்த மருத்துவ நூல்களாக ஏற்கப்படாததோடு, எளிதாக அவை ஆயுர்வேத நூல்களாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஆயுஷ் அமைச்சகத்தின் இத்தகைய சூழ்ச்சி காரணமாக, தெலுங்கில் உள்ள "புலிப்பாணி வைத்திய சாத்திரம்" என்ற சித்த நூல் ஆயுர்வேத பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது. "ரச கந்தி மெழுகு", சித்த மருத்துவத்தில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு பரிசோதிக்கப்பட்ட முக்கிய நூல் தெலுங்கு வழியாக தற்போது ஆயுர்வேதத்தில் இணைக்கப்பட்டுள்ளது. தென் தமிழகத்தின் புகழ்பெற்ற "காயத் திருமேனி எண்ணெய்," வெட்டு மாறன் குளிகை போன்ற "சித்த வர்ம" மருந்துகள் மலையாள மொழி வாயிலாக ஆயுர்வேதத்தில் சேர்க்கப்படவுள்ளது. மேலும், தமிழ் மொழியில் உள்ள "அகத்தியர் வைத்தியம்" போன்ற நூல்கள் ஆயுர்வேத நூலாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

மிகப்பெரிய மருத்துவ ஞானி தமிழர் மூதாதை இராவணனின் குழந்தை மருத்துவ நூல்கள் இப்பட்டியலில் சேர்க்கப்படவில்லை. ஆனால், இந்தி மொழியில் "ராவணன் கௌமார தந்திரம்" என்ற நூல் மட்டும் ஆயுர்வேத பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. சித்த சார நிகண்டு, சித்த யோக சங்கிரகம் போன்ற "சித்த" அடைமொழி கொண்ட 9 தமிழ்ச்சித்த நூல்களையே ஆயுர்வேத நூலாகக் குறிப்பிட்டுள்ள கொடுமையும் அரங்கேறியுள்ளது.

அதுமட்டுமின்றி, சித்த மருத்துவ நூல்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. அதன்படி, புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் சித்த மருத்துவ நூல்கள் ஏற்கப்பட மாட்டாது. பிறமொழிகளில் உள்ள சித்த நூல்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. சுதந்திரத்திற்கு முன் வெளியிடப்பட்ட தமிழ் மருத்துவ நூல்களை அங்கீகரிக்க முடியாது. அப்துல்லா சாகிப், வீரமாமுனிவர் போன்றவர்கள் சேகரித்துத் தந்த மருத்துவ நூல்கள் இவற்றில் சேர்க்கப்படவில்லை. யாழ்ப்பாணம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற அயல்நாடுகளில் பாதுகாக்கப்பட்ட தமிழ் சித்த நூல்கள் இப்பட்டியலில் இல்லை.

இக்கட்டுப்பாடுகளின் விளைவாக இனி, சித்த மருத்துவம் தன் தனித்துவத்தை இழந்து, தனி மருத்துவமுறையாக இல்லாமல், அனைத்தும் ஆயுர்வேதமாக மாறிவிடும். இதன் மூலம், தமிழர் மருத்துவ அறிவு, வடமொழியில் களவாடப்பட்டு ஏற்கப்படும் நிலை திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. இக்கொடுமைகளை தமிழ்நாடு அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

உலக மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி தமிழே என்றும், தமிழ் சித்த மருத்துவமே ஆயுர்வேத மருத்துவமாயிற்று என்றும் தமிழ்ப்பேரறிஞர்கள் க.நெடுஞ்செழியன், தேவநேயப் பாவாணர் உள்ளிட்டோர் தங்கள் ஆய்வின் மூலம் நிறுவியுள்ளனர்.

ஆகவே, தமிழ்நாட்டு அரசு, சித்த மருத்துவ அறிஞர்களின் குழுவை அமைத்து, பிப்ரவரி 7 அறிவிப்பில் உள்ள அட்டவணையை ஆய்வு செய்ய வேண்டும். சித்த நூல்களாகவே இருக்க வேண்டிய நூல்களை மீட்டுச் சித்த பட்டியலில் சேர்க்க வேண்டும். தமிழகத்திற்கே உரிய சித்த மருத்துவ நூல் பட்டியலை அரசு வெளியிடுவதோடு, தமிழர் மருத்துவ அறிவைப் பாதுகாக்கும் தனிச் சட்டத்தை நடப்பு சட்டமன்றக்கூட்டத்தொடரிலேயே இயற்ற வேண்டுமென வலியுறுத்துகிறேன்.


இந்திய ஒன்றிய அரசு இது குறித்து மூன்று மாதத்திற்குள் பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டுள்ள நிலையில், தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாகத் தங்கள் எதிர்ப்பினைப் பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்னஞ்சல் அனுப்ப வேண்டிய முகவரிகள்:

1. ஒன்றிய ஆயுஷ் அமைச்சகம்: dcc-ayush@nic.in
2. தமிழ்நாடு முதலமைச்சர் அலுவலகம்: cmo@tn.gov.in, cmcell@tn.gov.in

நம் மூதாதைகள் நமக்களித்துச் சென்ற தமிழ் மருத்துவ அறிவு, அந்நியர்களால் அவர்களுடையதென களவாடப்படாமல் பாதுகாக்க வேண்டிய கடமை தமிழராய் பிறந்த நம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை அனைவரும் ஒன்றுபட்டு தமிழ்ச்சித்த மருத்துவத்தை மீட்போம்! தலைமுறை தாண்டி காப்போம்!

இவ்வாறு அந்த அறிக்கையில் சீமான் அவர்கள் தெரிவித்துள்ளார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சுன்னாக நிலத்தடிநீரில் எண்ணெய் படலமா — ஐந்து கிணறு மாதிரிகளை பரிசோதனைக்கு அனுப்ப முடிவு!

பு. கஜிந்தன்



சுன்னாக நிலத்தடி நீரில் மீண்டும் எண்ணெய் படலம் ஏற்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீர்வளங்கள் சபைக்கு உடுவில் பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ஸ்ரீ பவானந்த ராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

சனிக்கிழமை உடுவில் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம் பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ஸ்ரீ பவனந்தராஜா தலைமையில் இடம் பெற்றபோது சமூகமட்ட பிரதிநிதி ஒருவர் முன்வைத்த கோரிக்கைக்கு இவ்வாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்ட நிலையில் சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் சுன்னாக நிலத்தடி நீரில் நொதேன் பவர் தனியார் நிறுவனத்தினால் வெளியேற்றப்படுகின்ற கழிவு எண்ணெய் நிலத்துக்கு கீழ் இறக்கப்பட்ட நிலையில் மக்களின் குடிநீர் கிணறுகள் தொடக்கம் விவசாய கிணறுகள் வரை கழிவு எண்ணெய் தாக்கம் உணரப்பட்டது.

சிலர் அதனை மறுத்து வந்த போதும் இறுதியில் உண்மை கண்டறியப்பட்ட நிலையில் தற்போது சுன்னாக பிரதேச மக்களின் குடிநீர் கிணறுகள் தொடர்பில் என்ன நிலைப்பாடு இருக்கிறது என்பது தொடர்பில் மக்களுக்கு தெரியாது.

ஏனெனில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்களின் கிணறுகள் தொடர்பான பரிசோதனை அறிக்கைகளை எடுத்ததாக நாங்கள் அறியவில்லை.

அது மட்டுமல்லாது மருதனார் மடப் பகுதியில் அமைந்துள்ள வாகனங்கள் சுத்திகரிக்கும் நிலையத்தில் அதிகளவிலான அரச நிறுவனங்களின் வாகனங்கள் சுத்திகரிப்பு இடம்பெறுகின்றது.

குறித்த சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள பகுதி வளமான விவசாய நிலங்களைக் கொண்ட பகுதியாக காணப்படுகின்ற பகுதியில் குறித்த சுத்திகரிப்பு நிலையத்தின் எண்ணெய் கழிவுகள் அங்கு செல்கின்றது என்பது தொடர்பில் எமக்கு ஏதும் தெரியாது.

இவ்வாறான நிலையில் முன்பு ஏற்பட்ட பாரியாய அனர்த்தம் போன்று எதிர்காலத்தில் கழிவு எண்ணெயினால் ஏற்படும் ஆபத்தை தவிர்ப்பதற்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த அபிவிருத்தி குழு தலைவர் சுன்னாக நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் தாக்கம் தொடர்பில் நான் நன்கு அறிவேன்.

ஆகையால் பொதுமக்களின் குற்றச்சாட்டு தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு இருக்கும் நிலையில் நீர்வளங்கள் சபை அதிகாரிகள் சுன்னாணாகப் பகுதியில் உள்ள 5 குடி நீர் கிணறுகளின் நீர் மாதிரிகளில் எண்ணெய் படலம் இருக்கிறதா என்பது தொடர்பில் பரிசோதனை அறிக்கையை பிரதேச அபிவிருத்தி குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார்.

அதேபோன்று வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு எண்ணெய் எவ்வாறு வெளியேற்றப்படுகிறது என அறிக்கை சமர்ப்பிப்பதோடு சுற்றாடல் அதிகார சபையினால் குறித்த சுத்திகரிப்பு நிலையத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிகள் தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உடுவில் பிரதேச சபைச் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் திணைக்களத் தலைவர்கள் கிராம சுவையாளர்கள் சமூகமட்ட பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்ற வயோதிபப் பெண் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் மரணம்!

யாழ்ப்பாணத்தில்துவிச்சக்கர வண்டியில் சென்ற வயோதிபப் பெண்ணொருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் 29-03-2025 அன்றைதினம் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், துவிச்சக்கர வண்டியில் பயணித்த குறித்த பெண் 29-03-2025 அன்றைறையதினம் தட்டாதரு சந்தியூடாக அரசடி வீதிக்கு திரும்ப முயற்சித்துள்ளார். இதன்போது கே.கே.எஸ் வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் அவர்மீது மோதியதில் படுகாயமடைந்தார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அன்றையதினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# தந்தை செல்வாவின் பிறந்த நாளை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியில் பல்துறை கலைஞர்கள் கௌரவிப்பட்டனர்!



தந்தை செல்வாவின் பிறந்த நாளை முன்னிட்டு தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால் பல்துறை ஆளுமைகளுக்கு தந்தை செல்வா விருது 30-03-2025 மாலை வழங்கி வைக்கப்பட்டது.

யாழ். வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் விசாகப்பெருமாள் உமாபதி தலைமையில் குறித்த நிகழ்வு ஆரம்பமானது. இதன் பொழுது வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பல்துறை சார்ந்த ஆளுமைகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கபட்டது.

தொடர்ந்து தந்தை செல்வா, நற்பணி மன்றத்தினால் பொருண்மியம் நலிந்தோருக்கு மூக்கு கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

இதன் பொழுது தந்தை செல்வா நற்பணி மன்றத்தினர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.





# ஜனாதிபதி மீதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் நம்பிக்கை இழந்துள்ளோம்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் தெரிவிக்கின்றனர்



ஜனாதிபதி மீதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் நம்பிக்கை இழந்துள்ளோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

30-03-2025 அன்று காலை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

குறித்த போராட்டம் 30-03-2025 அன்று காலை கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.



# 6 மாதங்களாக கோமாவில் சிகிச்சை பெற்று வந்த பிரதேச செயலர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மரணம்!

விபத்தில் சிக்கி கோமா நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பிரதேச செயலர் ஒருவர் இன்றையதினம் உயிரிழந்துள்ளார். மடு - கற்கிரந்தகுளம் பகுதியைச் சேர்ந்த சகாயராஜா யேசுதாஸ் பெரேரா (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் அநுராதபுரம் வீதியில், மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது நடந்து சென்றவர் மீது மோதினார். இதன்போது நடந்து சென்ற நபர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பிய நிலையில் குறித்த நபர் கோமா நிலைக்கு சென்றுள்ளார்.

பின்னர் மதவாச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு 2 மாதங்கள் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்தார். அதன்பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு 4 மாதங்கள் கோமா நிலையில் அங்கு சிகிச்சை பெற்றார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி இன்றையதினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# ஆனையிறவு உப்பு உற்பத்தியை மீள ஆரம்பித்ததைப்போன்று போர் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை

இலங்கை செய்திகள் Sri Lanka News

## வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு



ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தை மீள ஆரம்பித்ததைப்போன்று வடக்கில் போர் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. இதன் ஊடாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளையோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பும் அதிகரிக்கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தேசிய உப்பு நிறுவனத்தின் ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலையில், மேசை உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு மார்ச் 29ம் திகதி அன்று சனிக்கிழமை இடம்பெற்றது. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகரன் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு ஆனையிறவில் நடைபெற்றது.

தொழிற்சாலையை விருந்தினர்கள் இணைந்து சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்த பின்னர் மேடை நிகழ்வுகள் நடைபெற்றன.

தேசிய உப்பு நிறுவனத்தின் தலைவர் கயான் வெல்லால தனது வரவேற்புரையில், மன்னாரில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டாலும் அதனை விட ஆனையிறவு உப்பே தரமானது எனக் குறிப்பிட்டார். தற்போது பொருத்தப்பட்டுள்ள நவீன இயந்திரங்கள் மூலம் மணித்தியாலத்துக்கு 5 மெட்ரிக் தொன் மேசை உப்பை உற்பத்தி செய்யமுடியும் எனவும் தெரிவித்தார். 2026ஆம் ஆண்டிலிருந்து உப்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் அவர்கள் தனது உரையில், வடக்கு மாகாணத்து இளையோருக்கு வேலை வாய்ப்பை வழங்கிய பல தொழிற்சாலைகள் போரினால் மூடப்பட்டுள்ளன. இதனால் வேலை வாய்ப்பின்மை எமது மாகாணத்தில் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் ஆனையிறவு உப்பு தொழிற்சாலையை மீள முழு வீச்சில் இயக்க ஆரம்பித்திருக்கின்றது. ஆனையிறவு உப்புக்கு தனித்துவமான மதிப்பு இருக்கின்றது. அந்த வகையில் இதை மீளச் செயற்படுத்துவதானது சிறப்பானது. எதிர்காலத்தில் ஆனையிறவு உப்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் ஊடாக எமது மாகாணம் மேலும் வளர்ச்சிப்பாதையில் பயணிக்கும், எனக் குறிப்பிட்டார்.

கடற்றொழில் அமைச்சர் தனது உரையில், இன்றைய நாள் உங்களுக்கும், எங்களுக்கும் ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் மகிழ்ச்சியான நாள். பல இன்னல்களைச் சந்தித்தாலும் எமது மண்ணின் வாசத்தை பரப்பியது ஆனையிறவு உப்புத்தான். பலரும் விரும்பிப் பயன்படுத்து ஆனையிறவு உப்பு மீண்டும் உங்கள் கைகளுக்கு வரப்போகின்றது. ஆனையிறவு உப்புக்கு தனியான "மவுசு" உண்டு. விரைவில் ஆனையிறவு உப்பு என்ற பெயரில் உலகம் எங்கு இது விற்பனையாகும், என்று குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய கௌரவ அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, இன்றைய நாள் எல்லோருக்கும் மகிழ்ச்சிக்குரிய நாள். எமது அரசாங்கம் பதவிக்கு வந்த 5 மாதங்களில் இந்த தொழிற்சாலையை திறந்து வைத்திருக்கின்றோம். கடந்த காலங்களில் இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பை வேறு தரப்புக்கள் கொள்வனவு செய்து வெள;வேறு பெயர்களில் விற்பனை செய்தார்கள். இப்போது இங்கிருந்தே மக்களுக்கு உப்பை விற்பனை செய்யும் வகையில் நாம் மாற்றியமைத்துள்ளோம், என்றார்.











# யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளிற்கான நவீன வசதிகளுடன் கூடிய அதி தீவிர சிகிச்சை ப்பிரிவு திறந்துவைக்கப்பெற்றது



- எமது யாழ்ப்பாணச் செய்தியாளர்

பிறந்த குழந்தைகளிற்கான நவீன வசதிகளுடன் கூடிய அதி தீவிர சிகிச்சை ப்பிரிவு யாழ் போதனா வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பெற்றது. ஒரே சமயத்தில் நான்கு பிள்ளைகளை பிரசவித்து குறித்த சிகிச்சைக்களத்தில் மருத்துவப்பாராமரிப்பில் உள்ள குழந்தை களின் தாயார் இச் சிகிச்சை ப்பிரிவைத் திறந்து வைத்தார். இச் சிகிச்சை ப்பிரிவானது வைத்தியநிபுணர். டாக்டர் சி. நித்தியரூபனின் நேரடி நிர்வாகத்திலும் கண்காணிப்பிலும் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர். த. சத்தியமூர்த்தியின் வழிகாட்டலிலும் செயல்பட்டு வருகிறது இதனை வைத்திய நிபுணர் டாக்டர். நி. அர்ச்சனா மங்களவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.






# தனக்கு எதிராக முகநூல்களில் போலி பிரச்சாரம்

## மன்னார் பிரதேச சபையின் வேட்பாளர் இஸ்மாயில் முஹம்மது நிலான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு



(2-04-2025)

என்னுடைய அரசியல் செயல் பாடுகளை தடுப்பதற்காகவும் எனக்கு எதிரான இன ரீதியான பிரசாரங்களை முன்னெடுத்து என் மீது சேறு பூசும் செயல்பாட்டை மன்னார் பேசாலை யைச் சேர்ந்த பிரியதர்ஷினி றொட்ரிகோ என்கிற பெண்மணி முன்னெடுத்து வருவதாக மன்னார் பிரதேச சபையின் வேட்பாளர் இஸ்மாயில் முஹம்மது நிலான் தெரிவித்தார்.

அவர் ஏப்ரல் 2ம் திகதி புதன்கிழமை அன்றைய தினம் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், மன்னார் பேசாலை யைச் சேர்ந்த பிரியதர்ஷினி றொட்ரிகோ என்கிற பெண்மணி கடந்த சில வாரங்களுக்கு முன்னர் முக நூல்களில் எனது பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையிலும், நான் அரசியல்வாதி ஒருவரின் கீழிருந்து சட்டவிரோத செயல் பாடுகளில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டார்.

அதேபோல் அண்மையில் முக நூல்களில் என் மீது அபாண்டங்களையும் பொய்களையும் கூறி என்னுடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி வருகிறார்.

இது தொடர்பில் நான் மன்னார் போலீஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்திருந்தேன்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் அவரையும், என்னையும் இன்றைய தினம் (2) விசாரணைகளுக்காக போலீசார் அழைத்திருந்தனர்.

போலீசாரின் அந்த அழைப்பை ஏற்று உரிய நேரத்துக்கு நான் சமூகமளித்திருந்தேன்.

பிரியதர்ஷினி என்கிற அந்தப் பெண்மணி அங்கு வருகை தரவில்லை.

இது தொடர்பாக போலீசார்,என்னிடம் குறிப்பிட்டார்கள் அந்த பெண்மணி வரவில்லை என்பதால் நீங்கள் இங்கிருந்து செல்லுமாறும்,தேவையான பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

அந்த வகையில் நான் போலீஸ் நிலையத்தை விட்டு வெளியே வந்தேன்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நான் மன்னார் பிரதேச சபைக்கு வேட்பாளராக போட்டியிடுகிறேன்.

எனவே இந்த பெண்மணியின் நோக்கம் என்னவென்றால் என்னுடைய அரசியல் செயல் பாடுகளை தடுப்பதற்காகவும் எனக்கு எதிரான இன ரீதியான பிரசாரங்களை முன்னெடுத்து என் மீது சேறு பூசும் செயல்பாட்டை இவர் செய்கிறார் என்பது புலனாகிறது.

அந்த வகையில் என் மீது இட்டுக் கட்டப்பட்டு என்னுடைய அரசியல் பாதையை தடுத்து அதன் மூலம் அவர் எதிர்பார்க்கின்ற இலக்கை அடைந்து கொள்ளலாம் என்று எதிர்பார்க்கிறார்.

எனவே மக்களிடம் வேண்டுவது இவர் தொடர்பில் மிகவும் விழிப்புடன் செயல்படு மாறும்,இன ரீதியான பிளவுகளுக்கு இப்படிப்பட்டவர்கள் முன் நின்று செயல் படுவதை எமது மக்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.என அவர் மேலும் தெரிவித்தார்.



# பிரித்தானியா விதித்த தடை

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

பிரித்தானியா இலங்கையில் போர்க் காலத்தில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அதில் சம்பந்தப்பட்ட நான்கு பேருக்கு தடை விதித்திருக்கிறது. இதுவரை காலமும் கனடா அமெரிக்கா ஆகிய நாடுகள் தடை விதித்திருக்கின்றன. பிரித்தானியா இவ்வாறு தடை விதித்திருப்பது இதுதான் முதல் தடவை.

முதலில் இந்த தடை வெளிவந்திருக்கும் பின்னணியைப் பார்க்கலாம். 58 ஆவது ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கிறது. அக்கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும் காலகட்டத்திலேயே பிரித்தானியாவின் தடை அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இரு கிழமைகளுக்கு முன்பு ஜெனிவா கூட்டத் தொடரின் பின்னணியில், அல் ஜசிராவின் ”ஹெட் டு ஹெட்” நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. அந்த நிகழ்ச்சியும் இப்பொழுது வெளிவந்திருக்கும் பிரித்தானியாவின் தடையும் ஏறக்குறைய ஒரே நோக்கத்தை கொண்டவை. இலங்கையின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்பு கூறுவதில் இருந்து தப்ப முடியாது என்பதை குறிப்பாலுணர்த்துவதுதான் இந்தத் தடை மற்றும் அல்ஜசீராவின் நேர்காணல் இரண்டினதும் நோக்கம் எனலாம்.

பிரித்தானியாவின் தடை நான்கு பேர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் மூவர் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்த படைப்பிரதானிகள். ஒருவர் தமிழ்த் தரப்பில் ஒரு தளபதியாகவிருந்து பின்னர் சிங்களத் தரப்புடன் இணைந்தவர. இதில் படைப் பிரதானிகளாக காணப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அவர்கள் போர்க்களத்தில் புரிந்ததாக கூறப்படும் அல்லது போர்க்காலத்தில் புரிந்ததாக கூறப்படும் குற்றங்களுக்கு எதிரானவை. அதுபோலவே கருணாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளும் அவர் போரில் ஈடுபட்டிருந்த காலகட்டங்களில் இழைத்த குற்றச்செயல்களுக்கு எதிரானவை. அதை இன்னும் அறுத்துறுத்துச் சொன்னால், அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தளபதிகளில் ஒருவராக இருந்த காலத்தில் செய்ததாக கூறப்படும் குற்றங்கள் மற்றும் அந்த இயக்கத்தில் இருந்து விலகிய பின்னர் அரசாங்கத்தோடு இணைந்து செயல்பட்ட காலங்களில் செய்ததாக கூறப்படும் குற்றங்கள் ஆகிய இரண்டு வகை குற்றங்களுக்கும் எதிரான தடை.

இது தொடர்பாக பிரித்தானிய அரசின் உத்தியோகபூர்வ அறிக்கையில், கருணா தொடர்பாக கூறும் இடத்தில் ”பயங்கரவாத இயக்கம்” என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது பிரித்தானியாவின் உத்தியோகபூர்வ அறிக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பு என்றே அழைக்கப்படுகிறது.

நாலாம் கட்ட ஈழப்போரில் கருணா அரச தரப்புடன் இணைந்து செயல்பட்டதை வைத்து இந்த தடை அரசு படைப்பிரதானிகளுக்கும் அரசாங்கத்தோடு இணைந்து செயல்பட்ட கருணாவுக்கும் எதிரானது என்றுதான் ஒரு பொதுவான தமிழ் விளக்கம் காணப்படுகின்றது. ஆனால் அது முழு உண்மையல்ல. இந்தத் தடைக்குள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளும் உண்டு. ஐநாவின் அறிக்கைகளில் போர்க்களத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்கும் எதிராக என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என்பதையும் இங்கு தொகுத்துக் கவனிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளிலும் மனித உரிமை மீறல்கள், மனித உரிமை துஷ்பிரயோகங்கள் போன்ற வார்த்தைகள்தான் காணப்படுகின்றன. இன அழிப்பு என்ற வார்த்தை இல்லை. அதாவது பிரித்தானியாவின் தடையானது நடந்தது இன அழிப்பு என்பதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்த 15ஆண்டுகளாக ஐநாவின் அறிக்கைகளிலும் அதுதான் காணப்படுகின்றது. அங்கேயும் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றவை இனஅழிப்பு என்று உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதில் ஒப்பீட்டளவில் கனடாவில் நிறைவேற்றப்பட்ட இரு தீர்மானங்கள் இன அழிப்பு என்பதனை ஏற்றுக்கொள்கின்றன. தீர்மானங்களில் இன அழிப்பு என்ற வார்த்தை பயன்படுத்தப் படுகிறது. ஆனால் அது கனடாவின் இலங்கை தொடர்பான வெளியுறவு அணுகுமுறைகளில் கொள்கைத் தீர்மானமாக எடுக்கப்படவில்லை. அதாவது ஒரு ராஜதந்திர முடிவாக அது நடைமுறையில் இல்லை.

எனவே கடந்த 15 ஆண்டுகளாக மேற்கத்திய நாடுகளும் ஐநாவும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கும் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளைத் தொகுத்துப் பார்த்தால் அங்கே ஒரு பொதுத் தன்மையைத் தமிழர்கள் கண்டுபிடிக்கலாம். அது என்னவென்றால் இலங்கைத் தீவில் இடம்பெற்றது இன அழிப்பு என்பதனை உத்தியோகபூர்வ வெளியுறவுக் கொள்கை நிலைப்பாடாக மேற்கு நாடுகள் இதுவரை எடுத்திருக்கவில்லை. இது முதலாவது.

இரண்டாவது ஐநாவும் அது இனப்படுகொலை என்பதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

மூன்றாவது, கடந்த 15 ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான தடைகளை எல்லா நாடுகளும் தொடர்ந்து பேணுகின்றன. தாயகத்தில் செயல்படாத ஒரு அமைப்புக்கு எதிராகத் தடையைத் தொடர்ந்து பேணுவதன் மூலம் அவர்கள் தமிழ் மக்களுக்கு உணர்த்த முற்படும் வரையறைகள் எவை?

நான்காவது, ஐநாவில் இலங்கை இனப்பிரச்சினையானது வரையறுக்கப்பட்ட ஆணையைக் கொண்ட ஐநாவின் உறுப்பாகிய மனித உரிமைகள் பேரவைக்குள்தான் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. மனித உரிமைகள் பேரவையானது ஐநாவின் 8 உறுப்புகளில் ஒன்று. பாதுகாப்புச் சபை, பொதுச் சபை போன்று அதிகாரம் மிக்கதல்ல. ஒரு நாட்டுக்கு எதிராக படையினரை அனுப்பவோ அல்லது பொருளாதாரத் தடைகளை விதிக்கவோ தேவையான ஆணை மனித உரிமைகள் பேரவைக்குக் கிடையாது. சம்பந்தப்பட்ட நாட்டின் அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே மனித உரிமைகள் பேரவை அந்த நாட்டில் இறங்கி வேலை செய்யலாம்.

குறிப்பாக 2021 ஆம் ஆண்டிலிருந்து ஐநா மனித உரிமைகள் பேரவைக்குள் ஓர் அலுவலகம் இயங்கி வருகிறது. இலங்கைத்தீவின் போர்க்களத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகம் அது.அப்படி ஒரு பொறிமுறை வேண்டும் என்று 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்த்தேசியக் கட்சிகள் கூட்டாக ஒரு கடிதத்தை எழுதின. அந்தப் பொறிமுறையானது மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே பொறுப்பு கூறலைக் கொண்டு போகவேண்டும் என்பது கடிதத்தின் சாராம்சம் ஆகும். மேலும் அந்தப் பொறிமுறைக்கு ஒரு கால வரையறை உருவாக்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கூட்டு கடிதத்தில் கேட்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கோரிக்கைகளில் பெரும்பாலானவை ஐநாவால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 2021ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அந்தப் பொறிமுறையானது ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு உட்பட்ட ஓர் அலுவலகமாகத்தான் உருவாக்கப்பட்டது. அதாவது பலவீனமான ஆணையை கொண்ட.

இதுதான் ஐநாவில் தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடியவற்றின் வரையறை. இவ்வாறு கடந்த 15 ஆண்டு காலமாக மேற்கை மையமாகக் கொண்ட, அல்லது ஐநாவை மையமாகக் கொண்ட நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தின் விளைவுகளைத் தொகுத்துப் பார்த்தால் பின்வரும் சித்திரம் கிடைக்கும்.

மேற்கு நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் அதே சமயம் நீதிக்கான தமிழ் மக்களின் கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதோடு தமிழ் மக்களுக்கு அனைத்துலக அளவில் இருக்கக்கூடிய ராஜதந்திர வாய்ப்புகளின் வரையறைகளையும் அவை உணர்த்துபவைகளாகக் காணப்படுகின்றன.

எனினும் 15 ஆண்டுகளின் பின்னரும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்ட வழியில் தமிழ் மக்கள் மெதுமெதுவாக முன்னேறி வருகிறார்கள் என்பதனை பிரித்தானியாவின் தடை உணர்த்துகின்றது. குறிப்பாக நிதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் பெற்ற ஆகப்பிந்திய வெற்றியாகவும் அதைக் கூறலாம். அண்மையில் கனேடிய உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் அத்தகையதே. கனடாவில் நிறைவேற்றப்படட இனஅழிப்பு அறிவூட்டடல் தீர்மாதற்கு எதிரான வழக்கில், கனேடிய உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டுவது.

இவை யாவும் வரையறைக்குட்பட்ட வெற்றிகள்தான்.நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் மேலும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டி உள்ளது. கனடா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் விதித்திருக்கும் தடைகளும் குறிப்பாக கனடாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களும் நீதிக்காக தமிழ் மக்களின் போராட்டத்துக்கு உற்சாகமூட்டுபவை. அதேசமயம் மேற்கு நாடுகளின் மேற்படி நகர்வுகள் யாவும் அந்தந்த நாடுகளின் பூகோள ராணுவ அரசியல் பொருளாதார நலன்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் தான் என்பதையும் தமிழர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது இலங்கைத் தீவில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சி செய்கின்றது. சீன இடதுசாரிப் பாரம்பரியத்தில் வந்த ஜேவிபிதான் தேசிய மக்கள் சக்தியின் அடித்தளமாக உள்ளது. எனவே இப்புதிய அரசாங்கம் மேற்கு நாடுகளின் செல்வாக்கு வளையத்தைத் தாண்டிச் சென்று சீனாவை நோக்கி நெருங்கிச் செல்வதில் அதற்கு இருக்கக்கூடிய வரையறைகளை உணர்த்தும் மேற்கு நாடுகளின் ராஜதந்திர இலக்குகளில் ஒன்று ஆகும். அதை அவர்கள் தமிழ் மக்களின் பெயரால் ”பொறுப்புக் கூறல்” என்ற தலைப்பின் கீழ் ராஜதந்திரமாக முன்னெடுக்கின்றார்கள்.

இந்த விடயத்தில் மேற்கு நாடுகள் மட்டுமல்ல இந்தியா, சீனா, ஐநா முதலாக உலகில் எந்த ஓர் அரசக் கட்டமைப்பும் இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் அவ்வாறுதான் முடிவு-களை எடுக்கும். அரசுகள் எப்பொழுதும் தங்களுடைய ராணுவப் பொருளாதார அரசியல் நோக்கு நிலைகளில் இருந்துதான் முடிவுகளை எடுக்கும். பிரித்தானியாவின் தடையும் அதுதான்.

ஏன் கடவுளுக்கு ஓர் அரசிருந்து அங்கு முடிவு எடுக்கப்பட்டாலும் அப்படித்தான் அமையும். இதில் தமிழர்கள்தான் தங்களுடைய நலன்களும் வெளி அரசுகளின் நலன்களும் வெட்டும் ஒரு பொதுப் புள்ளியைக் கண்டுபிடித்து அங்கிருந்து தொடங்கி தமக்குக் கிடைத்திருக்கும் ராஜதந்திர வாய்ப்புகளை எப்படி முழு வெற்றியாக மாற்றுவது என்று திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே மேற்கு நாடுகளால் விதிக்கப்படும் தடைகளையும் தீர்மானங்களையும் தமிழ் மக்கள் அணுக வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்ட தடைகளும் தீர்மானங்களும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு கிடைத்த உற்சாகமூட்டும் வெற்றிகளாகும்.

தமிழ் மக்கள் யாருக்கு எதிராக நீதியைக் கேட்டு போராடுகிறார்களோ அவர்கள் அங்கு தண்டிக்கப்படுகிறார்கள். மேற்கு நாடுகளின் தடைகள் ஒருவிதத்தில் தமிழ் மக்களுக்கும் வரையறைகளை உணர்த்துபவைதான். என்றாலும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்கு எதிராக அதன் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்திகளாக அவை காணப்படுகின்றன. இந்த விடயத்தில் மேற்கு நாடுகள் தங்களோடு முழுமையாக இல்லை என்று கருதி தமிழ் மக்கள் அவற்றுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கத் தேவையில்லை. தடைகள் விடயத்தில் மேற்கும் ஐநாவும் அரைவாசி அளவுக்கு தமிழ் மக்களுக்குச் சாதகமாக நிற்கின்றன. எனவே தமக்கு கிடைத்திருக்கும் பாதியளவு சாதகமான ராஜதந்திர வாய்ப்புகளை முழு அளவு சாதகமானவைகளாக எப்படி மாற்றுவது என்றுதான் தமிழ்த் தரப்பு சிந்திக்க வேண்டும்.

எனவே வெளியரசுகள் அவற்றின் நலன் சார்ந்து எடுக்கும் நகர்வுகளை எப்படி ஈழத் தமிழர்கள் தமது நலன் சார்ந்து வெற்றிகரமாகக் கையாளலாம் என்று சிந்திக்க வேண்டும். இதைத் தொகுத்துச் சொன்னால் தமிழ் மக்கள் ஓர் அரசு போல சிந்திக்க வேண்டும். ஒரு அரசு இன்னொரு அரசோடு கொள்ளும் உறவுகளில் இரண்டு தரப்புக்கும் பொதுவான நலன்கள் ஒன்றை ஒன்று வெட்டும் புள்ளியில்தான் உறவுகள் விருத்தி அடைகின்றன. எனவே ஈழத் தமிழர்கள் ஓர் அரசு போல சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். ராஜதந்திரத்தில் நலன்கள்தான் முக்கியம். அறம் தர்மம் நீதி போன்றவை அங்கே கிடையாது. தொப்புள்கொடி உறவு இதயமும் இதயமும் கலக்கும் உறவு என்பவையெல்லாம் கிடையாது. நலன்களும் நலன்களும் சந்திக்கும் புள்ளிகள்தான் ராஜதந்திரம். எனவே ஓர் அரசாக சிந்தித்து ஈழத் தமிழர்கள் முடிவெடுக்க வேண்டும். பிரித்தானியாவின் தடை தமிழ் மக்களுக்கு அண்மையில் கிடைத்திருக்கும் ஒரு வெற்றி. அந்த வெற்றி முழுமையானது இல்லை. அதை எப்படி ஒரு முழுமையான ராஜதந்திர வெற்றியாக மாற்றுவது என்பது ஈழத் தமிழர்கள் ஒரு அரசாகச் சிந்தித்து முடிவெடுப்பதில்தான் தங்கியிருக்கின்றது. ஆனால் ஓர் அரசு போல் சிந்திப்பதென்றால் அதற்கு முதலில் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள வேண்டும்.

## A NOTE FROM GARY

*Dear Friends,*

*Since 2015, I have had the honour of representing you in Parliament and working every day to deliver for Scarborough—Guildwood—Rouge Park.*

*From securing the Scarborough Subway Extension to expanding affordable dental and child care, to making federal investments in local jobs, infrastructure, and housing, we have made real progress together.*

*Now, with our economy and way of life being tested like never before, it's crucial we elect a government that will stand up for Canada and meet this moment. Mark Carney has both the experience and vision to lead us through this trade war and build a stronger, more resilient economy for all.*

*A re-elected Liberal Government will:*

- *Deliver a middle-class tax cut*
- *Build the fastest-growing economy in the G7*
- *Keep delivering for Scarborough with investments that matter*
- *Protect the jobs, livelihoods, and values that make us **Canada Strong***

*I hope to earn your support on April 28. Together, we can keep Scarborough's voice strong and build a brighter future for all Canadians.*

*Yours very truly,*

*Gary*



Authorized by the Official Agent for Gary Anandasangaree

RE-ELECT
GARY
ANANDASANGAREE
SCARBOROUGH—GUILDWOOD—ROUGE PARK
Liberal

WAYS TO VOTE

**ADVANCE POLLS**
April 18 - 21
9 AM to 9 PM

**ELECTION DAY**
April 28
9:30 AM to 9:30 PM

For voting locations, ID requirements, and other information, visit **Elections.ca**

**CANADA STRONG**

**416-584-VOTE (8683) | VoteforGaryA@gmail.com**
2884-2900 Ellesmere Rd, Scarborough, ON, M1E 4B8



APRIL 18&19 2025 FRIDAY & SATURDAY @6PM
GOOD FRIDAY LONG WEEKEND

KARIS EVENT PLACE
55 Nugget Ave unit 10, Scarborough

TICKETS
$30 $50 VIP($100)
416-566-0790

AAROSAI
APRIL 18

NATCHATHRAA MUSIC GROUP
APRIL 19




Ticket Available Locations

**Scarborough**
Cell Tell Mobility
2611 Eglinton Ave East | Tel: 416-266-6818
Cell Tell Mobility (Birchmount Road / Finch)
2950 Birchmount Rd Unit# 5C | Tel:416-495-7776

**Markham & Steeles**
New Royal Fashions
Tel: 416-519-1119
New Ranganas Jewellery
Tel: 647-702-2159
New Spiceland Supermarket Video
647-471-1810

**Majestic City**
Designs 2 Prints LTD
Tel: 647-858-2290

**GTA Square Mall**
Winners Lotto Centre
Tel: 416-291-9990

**Eraa plaza (Neilson / Finch)**
Sai Elanthulir Fashion
Jewellery & Money Transfer Tel: 416-471-1002

**Etobicoke (Kipling & Steeles)**
A S A Financial Service
(in Uthayas Supermarket) Tel:416-742-1425

**Tapscott Rd / finch ave**
DTA Convenience 416-332-0961
5633 Finch Ave E units 5

**Markham / Karachi Dr**
Cell Tel Mobility +1 (905) 201-4859
45 Karachi Dr, Unit#49
Markham, Ont, L3S 0B5

SCAN TO BUY ONLINE TICKET

VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION




**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com






**Carefirst Family Health Team**

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






**On April 28, re-elect**
**Salma Zahid**
Scarborough Centre - Don Valley East

Cut taxes for middle class families

Build 500,000 new homes you can afford

Build fastest growing economy in G7



CANADA STRONG

/SalmaZahid15 /SalmaZahidMP

Authorized by the Official Agent for Salma Zahid

எமது ஸ்கார்பரோ-அஜின்கோர்ட் தொகுதிக்கான கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்ப்பாளரின்கொள்கை அறிவிப்புகள்

ELECT Aris MOVSESSIAN
Scarborough-Agincourt

- அமெரிக்காவின் நியாயமற்ற வரிகளுக்கு எதிராக போராடுதல் மற்றும் கனேடிய மக்களின் வேலைகளை பாதுகாத்து நமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டுபாட்டில் எடுத்தல்.
- வருமான வரியை 15% குறைத்து, சராசரி தொழிலாளிகளுக்கு ஆண்டுக்கு $900 சேமிக்கவும், இரண்டு வருமானம் கொண்ட குடும்பங்கள் $1,800 சேமிக்கவும் உதவுதல்.
- மூத்த குடிமக்கள்
  - வரி விலக்குடன் சுடீ34,000 வரை சம்பாதிக்கவும்,
  - 73 வயது வரை ஓய்வூதிய சேமிப்புத் (சுசுளு) பங்களிப்பு நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கவும்,
  - ஓய்வூதிய வயதை 65 ஆக உறுதிப்படுத்தவும் உதவுதல்.
- புதிய வீடுகளுக்கான மத்திய விற்பனை வரியை $1.3 மில்லியன் வரை குறைத்து, வீடு வாங்குபவர்களுக்கு $65,000 வரை சேமிக்கவும் உதவுதல்.
- மோசமான குற்றவாளிகள் மீண்டும் ஒருபோதும் சுதந்திரமாக நடக்காமல் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் கனடியரக்ளின்பாதுகாப்பை கவனித்தல்.

"எதிர்வரும் ஏப்ரல் 28ம் திகதி மாற்றத்திற்காக வாக்களியுங்கள்! Aris Movsessian அவர்களுக்கு வாக்களியுங்கள்!"

www.arismovsessian.ca info@arismovsessian.ca
(416) 477-9933
Unit 5-2950 Birchmount Rd, Scarborough, M1W 3G5




Authorized by the Official Agent of Aris Movsessian.

# 'மகான்' என்னும் அறவிருட்சம் மறைந்து ஓடிச் சென்ற ஓராண்டு!

தோற்றம்: 06 - 12 - 1944



மறைவு: 12 - 04 - 2024

நாகமணி-செல்லம்மா இணையரின் இல்லறத்தில் முதல்வனாய்
நானெனவே மலையகத்தில் வந்துதித்த மாசற்ற மகான்
ஏகினார் எமைப் பிரிந்து வானுலகில் வாசம் செய்பவராய்
எமக்கானவர் என்றும் எம்முடனே உறைவார் எனிறிருக்க
எண்பதாம் அகவையில் அவரைக் கவர்ந்தான் கயவன் இயமன்
அன்றுவரை அன்பான மனைவி அரிய இரு பிள்ளைகள்
பின்னாளில் வந்திணைந்த மருமக்கள் உடன் பிறந்தவர் இன்னும்
பிரியமுள்ள பேரக்குழந்தைகளோடும் இதயத்தால் வாழந்தார்!

உள்ளத்தைப் போன்று உடலழகும் மிக்கவராய் அழகராய்
ஊரறிந்த பெருமகனாய் பெருமை கொள்ளா திருமகனாய்
கள்ளமில்லா மனதோடும் கனிவு படர் முகத்தோடும்
கால்பதித்த ஊரெல்லாம் சிலிர்த்தபடி சிந்தித்து வாழ்ந்தவரே
அள்ளி அள்ளித் தெளித்த பேரிடர்கள் பல வாட்டியும
அருகிருந்த அன்புடையாள் அவதியாய் மறைந்திடினும்
துள்ளித் திரிந்த பிள்ளைகள் இருவரையும் கண்கள்போல்
தேற்றி வளர்த்து மருமக்கள் வசம் ஒப்படைத்த மகான் நீங்கள்!

## அமரர். நாகமணி மகேந்திரன்

(முன்னாள் உத்தியோகத்தர் தலவாக்கலை பாமஸ்டன் குரூப்
மற்றும் பிரதம எழுதுவினைஞர்.
இறக்குவானை ஸ்பிரிங்வூட் பெருந்தோட்டம்)

இங்ஙனம்,
தங்களை இழந்து தவிக்கும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரி, மைத்துனிகள்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்

தகவல்:
ம. பிரதீபன் (மகன்-இலங்கை): 0742199585, 0776203599
கி. சஞ்சுதா (மகள்-இலங்கை): 0711642231, 0779157007
நா. லோகேந்திரலிங்கம் (சகோதரர்-கனடா): (416) 732-1608

# மரண அறிவித்தல்

பிறப்பு: 27 - 07 - 1948



இறப்பு: 25 - 03 - 2025

## திருமதி. தனலட்சுமி சண்முகநாதன்

**மலேசியாவைப் பிறப்பிடமாகவும் உடுவில், கொழும்பு, கனடா (பிரம்ரன்) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. தனலட்சுமி சண்முகநாதன் அவர்கள் 25.03.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறையுள் உறைந்தார்.**

அன்னார் தியாகராஜா நாகலட்சுமி அவர்களின் அன்பு மகளும், தம்பு சின்னத்தங்கம் அவர்களின் மருமகளும்,
சண்முகநாதன் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசான்) அவர்களின் மனைவியும்,
பரமசாமி அவர்களின் அன்புச் சகோதரியும்,
ஸ்ரீதரன், கலைச்செல்வி (கீதா), கலைவாணி (உமா), செந்தில்குமரன், சரவணன் ஆகியோரின் தாயாரும், தட்சாயினி, ஜெயரட்ணம் (ரஞ்சன்), குலேந்திரராஜா, ரகுப்பிரியா ஆகியோரின் மாமியாரும்,
பிரசன்னா, பிரியங்கா, பிருத்திகா, குமரன், மாதுமை, பார்கவி, சைந்தவி, ஹரிணி, சேயோன், கல்கி ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,
பேரானந்தநாயகி, சுந்தரலட்சுமி, தேவாம்பிகை, குமாரசாமி, கதிர்வேல் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

***அன்னாரின் பூதவுடல் 05-04-2025 சனிக்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணி வரையும், 06-04-2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி தொடக்கம் 9:30 மணி லரை*** Brampton Crematorium & Visitation Centre (30 Bramwin Ct, Brampton, ON L6T 5G2) ***இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணி தொடக்கம் 11:00 மணி வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று, தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**கீதா (மகள்): (647) 853-9891**
**சரவணன் (மகன்): (416) 846-8503**
**ரஞ்சன் (மருமகன்): (416) 522-6130**




# தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையில் "அரசியல்"

**"எந்தவொரு தேர்தலிலும் "தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்போம்" என வாக்குறுதி வழங்காத மஹிந்த ராஜபக்ஸ,ரணில்-மைத்திரி நல்லாட்சி, கோத்தபாய ராஜபக்ஸ அரசுகள் கூட தமிழ் அரசியல் கைதிகளை பலரை விடுவித்துள்ள போதும் "தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்வேன்" எனத் தமிழ்மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய அநுரகுமார அரசு தற்போது அந்த வாக்குறுதியை மீறி அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாதெனக் கூறுவது தமிழ்மக்களுக்கு செய்யும் அப்பட்டமான நம்பிக்கைத் துரோகம்"**

**------------------------------------------------------ - கே. பாலா ----**

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் வழக்குகளின்றியும் தண்டனைக்காலம் முடிவடைந்த நிலையிலும் நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் சிறைகளிலேயே மரணித்துமுள்ளனர் .இவ்வாறானவர்கள் விடுவிக்குமாறு தமிழ் மக்களும் தமிழ் தேசிய அரசியல்வாதிகளும் பல வருடங்களாக கோரிக்கைகளை விடுத்தும் போராட்டங்களை நடத்தியும் களைத்துப் போய்விட்டனர். ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தில் உள்ள மோசமான விதிகளை காரணம் காட்டி தமிழர்களை விடுவிக்க இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்த அரசுகள் மறுத்து வந்ததே வரலாறு.

அதே வழியில் தற்போது ஆட்சி பீடத்தில் உள்ள ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்ட. அதே பயங்கரவாத தடைச்சட்டத்தால் தண்டிக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட, பின்னர் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட ஜே.வி.பி. அரசு கூட பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு பலவருடங்களாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாது எனக்கூறி என்னதான் தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.) என்ற முகமூடியுடன் வந்தாலும் தாங்களும் தலைசிறந்த இனவாதிகள்தான். ஆயுதம் தூக்கிய சிங்களவர்களான நாம் சுதந்திர போராட்ட வீரர்கள், ஆயுதம் தூக்கிய தமிழர்கள் பயங்கரவாதிகள் என்ற இனவாத சித்தாந்தத்தையே இவர்களும் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

எந்தவொரு தேர்தலிலும் "தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்போம்" என வாக்குறுதி வழங்காத மஹிந்த ராஜபக்ஸ அரசு, ரணில்-மைத்திரி நல்லாட்சி அரசு-கோத்தபாய ராஜபக்ஸ அரசு கூட தமிழ் அரசியல் கைதிகளை பலரை விடுவித்துள்ளன. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்தபோது அரசிடம் சரணடைந்த 12000 வரையிலான விடுதலைப்புலிப் போராளிகளை அப்போதைய மஹிந்த ராஜபக்ச அரசு புனர்வாழ்வளித்து ச மூகத்துடன் வாழ அனுமதித்து விடுவித்தது. கடந்த மைத்திரி-ரணில் நல்லாட்சி அரசில் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 120 அரசியல் கைதிகள் நீதிமன்றங்களின் மூலமாக விடுவிக்கப்பட்டனர். அப்போது ஜனதிபதியாகவிருந்த மைத்ரிபால சிறிசேனவினால் தன்னை கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் சிறைவைக்கப்பட்டிருந்த தமிழர் ஒருவர் கூட பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்டார்.

அதுமட்டுமல்ல முன்னாள் பாதுகாப்பு செயலரும் ஜனாதிபதியாகவுமிருந்த கோத்தபாய ராஜபக்ஸ அரசில் கூட இலங்கை சிறைக-ளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளில் 16 பேர் பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு விடுதலை செய்யப்பட்டனர். அனுராதபுரம் சிறையிலிருந்து 15 பேரும் யாழ் சிறையிலிருந்து ஒருவருமாக இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 6 பேர் மன்னார் மாவட்டத்தையும் 9 பேர் யாழ் மாவட்டத்தையும் ஒருவர் மாத்தளை மாவட்டத்தையும் சேர்ந்தவர். இந்த 16 பேரில் ஒருவர் முஸ்லிம்.

ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாணத்திற்கு சென்ற ஜே.வி.பி.-என். பி.பி. தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க "பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை கட்டம் கட்டமாக விடுதலைசெய்வேன்" என வாக்குறுதியை வழங்கியே தமிழ் மக்களிடம் வாக்குகள் கேட்டார். இந்த வாக்குறுதியை நம்பியே தமிழ்மக்களும் அநுரகுமாரவுக்கு வாக்களித்துடன் பாராளுமன்றத் தேர்தலிலும் தமிழ் தேசியக் கட்சிகளைக் கூடப் புறக்கணித்து தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து அவர்கள் கோரிய மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால் தம்ளர்கள்தான் மாற வேண்டும் நாம் மாற மாட்டோம் என்றவாறாகவே அநுரகுமார அரசு அரசியல் கைதிகள் விடயத்தில் நடந்து கொள்கின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க "பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை கட்டம் கட்டமாக விடுதலைசெய்வேன்" என்று வழங்கிய வாக்குறுதியை தமிழ் மக்கள் நம்பியிருந்த நிலையில்தான் அரசியல் கைதிகள் என எவரும். கிடையாது எனவும் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாது எனவும் அநுரகுமார அரசின் அமைச்சர்கள் இனவாத முழக்கமிடத் தொடங்கியுள்ளனர்.

இதில் இலங்கைச் சிறைகளில் அரசியல் கைதிகளென யாரும் தடுத்து வைக்கப்படவில்லை என அநுரகுமார அரசின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார். நாட்டில் உள்ள எந்தவொரு சிறைகளிலும் அரசியல் கைதிகள் என்றொருவரும் இல்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் உள்ளார்கள். இவர்களில் சிலருக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. சிலரது வழக்குகள் நீண்டகாலமாகவும், குறுகிய காலமாகவும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன .அந்த வகையில், நாடாளவிய ரீதியில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பட்டியலை விரைவாக தயாரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டதன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகளைச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்று முன்னெடுப்பதற்குத் தயாராகி வருகின்றேன். அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் நியாயமாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதையே இலக்காக கொண்டிருக்கின்றது என்றும் கூறியுள்ளார்.

அநுரகுமார அரசின் பாராளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்னாயக்க ,அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பும் இல்லை, அவர்களை விடுதலை செய்யவும் முடியாது. தற்போது சிறையில் உள்ளவர்களில் யாரும் வெறும் சந்தேகநபர்கள் அல்ல. அனைவரும் நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக அடையாளம்காணப்பட்டவர்கள். உரிய நடைமுறைகளை நாங்கள் பின்பற்ற வேண்டும். அடுத்ததாக குறித்த சிறைகைதிகள் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ள சம்பவங்கள் மிகவும் பாரதூரமானவை. முன்னாள் ஜனாதிபதிகளுடைய கொலை திட்டமிடல்கள், பிலியந்தலை பஸ் குண்டு வெடிப்பு, மத்திய வங்கி குண்டு வெடிப்பு, கண்டி தலதா மாளிகை குண்டு வெடிப்பு, போன்ற சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர். எனவே அவர்களை விடுதலை செய்வது என்பது இலகுவான விடயமல்ல. எனவே அவர்களுக்கு இதற்கு முன் இருந்த ஜனாதிபதிகள் பொது மன்னிப்பு வழங்கியது போல் பொது மன்னிப்பு வழங்க முடியாது என்று கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஸ அரசு, ரணில்-மைத்திரி நல்லாட்சி அரசு-கோத்தபாய ராஜபக்ஸ அரசு தமிழ் அரசியல் கைதிகளை பலரை விடுவித்த போது பாராளுமன்றத்தில் எதிர்கட்சிகளில் ஒன்றாகவிருந்த இந்த அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-என்.பி.பி. கட்சி எந்தவொரு எதிர்ப்பினையும் வெளிப்படுத்தவில்லை. கடந்த வருடம் நடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் வடக்கு மாகாணத்திற்கு வந்து "தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம்" என்றவர் தொடர்ந்து பாராளுமன்ற தேர்தல் பிரசார மேடையிலும் அதே வாக்குறுதியை வழங்கினார். ஆனால் தமிழர் வாக்குகளுடன் ஆட்சிபீடம் ஏறியபின்னர் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று கூறியவர்கள் இப்போது தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய முடியாது அதற்கு பல சட்ட வழிமுறைகள் இருக்கின்றன என்று கூறுவது ஏன்?

ஜே.வி.பி.யினர் தேர்தலுக்கு முன்பாக கூறியதும் தேர்தலுக்கு பின்பாகக் கூறியதும் ஆட்சி பீடத்திலிருந்து கூறுவதும் நேரெதிர் கருத்துக்களாகவே உள்ளன. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை எதிர்க்கட்சியில் இருந்தபோது எதிர்க்காத ஜே.வி.பி.-என்.பி.பி.யினர் இன்று ஆட்சி பீடத்திலிருக்கும்போது தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாது. இதற்கு முன்பிருந்த ஜனாதிபதிகள் பொது மன்னிப்பு வழங்கியது போல் பொது மன்னிப்பு வழங்க முடியாது என்று கூறுவது ஏன்? ஆயுதம் தூக்கி போராடியதால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் வலிகளையும் கொடுமைகளையும் அனுபவித்து பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்ட ஜே.வி.பி.-என். பி.பி.யினர், அந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிக்க வேண்டுமென பாராளுமன்றத்தில் உரத்துக்கு குரல் எழுப்பிய ஜே.வி.பி.-என்.பி.பி.யினர், இன்று அதே பயங்கரவாத தடைச்சட்டத்தின் வலிகளையும் கொடுமைகளையும் பலவருடங்களாக சிறைகளில் அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க மறுப்பது ஏன்?

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ள அதாவது 225 பாராளுமன்ற ஆசனங்களில் 159 ஆசனங்களை தன்வசம் கொண்டுள்ள ஜே.வி. பி.-என்.பி.பி. அரசு தான் நினைத்த எதனையும் செய்யக்கூடிய,தான் கொண்டுவரும் எந்தத் சட்டமூலத்தையும் நிறைவேற்றக்கூடிய பலத்துடன் இருக்கும் நிலையில், அத்துடன் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதை தற்போதுள்ள எந்தவொரு எதிர்க்கட்சியும் எதிர்க்காத நிலையில் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய முடியாது அதற்கு பல சட்ட வழிமுறைகள் இருக்கின்றன எனக் கூறுவது அநுரகுமார அரசின் இனவாத முகத்தையே அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.

எந்தவொரு தேர்தலிலும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்போம் என வாக்குறுதிவழங்காத மஹிந்த ராஜபக்ஸ, ரணில்-மைத்திரி நல்லாட்சி -கோத்தபாய ராஜபக்ஸ அரசுகள் கூட தமிழ் அரசியல் கைதிகளை பலரை விடுவித்துள்ள போதும் "பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்அரசியல் கைதி-களை கட்டம் கட்டமாக விடுதலைசெய்வேன்" என வாக்குறுதி வழங்கிய அநுரகுமார அரசு தற்போது அந்த வாக்குறுதியை மறந்து அல்லது மீறி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியா-தெனக் கூறுவது தமிழ்மக்களுக்கு செய்யும் அப்பட்டமான நம்பிக்கைத் துரோகம். "மாற்றம்" ஏற்படுத்துவோம் என பிரசாரம் செய்து ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி.-என்.பி.பி. தமது இனவாத கொள்கையில் "மாற்றம்" ஏற்படுத்தாததை அல்லது ஏற்படுத்த மறுப்பதனை தமிழ் மக்கள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும். அதனை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவன் மீது ராக்கிங் என்ற போர்வையில் நடக்கும் வன்முறைக்கு தீர்வு வேண்டும் — ரஜீவன் எம்.பி




யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவன் மீது சிரேஷ்ட மாணவர்கள் தலைக்கவசத்தால் தாக்கி சித்திரவதை செய்ததன் விளைவாக, அவர் கேட்கும் திறனை இழந்துள்ளார். இது மாணவர்களின் பாதுகாப்பு குறித்து உரிய தரப்பு மீது கேள்விகளை எழுப்புகின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, பல்கலைக்கழக துணைவேந்தருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இவ்வாறான நாகரிகமற்ற செயல் தண்டிக்கப்பட வேண்டும். சக மாணவரை உடல்ரீதியாகவும் மனதளவிலும் பாதிப்புக்குள்ளாக்கும் இந்த பயங்கரமான கலாச்சாரம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டியது அவசியம்.

மாணவர் மீது நடக்கும் எந்தவொரு வன்முறையையும் தடுக்க உறுதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உரிய அதிகாரிகள் உடனடியாக முந்திய சம்பவங்களை விசாரித்து, குற்றவாளிகளை தக்க தண்டனைக்கு உட்படுத்த வேண்டும்.

மாணவர்களை சித்திரவதை செய்யும் மரபு இனி எதுவும் நடக்கக்கூடாது. சக மனிதர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் இந்த கீழ்த்தரமான செயல்களை ஒழிக்க தேவையான கடுமையான சட்ட நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.




# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவன் மீது பகிடிவதை

## கவனம் செலுத்திய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு!

"யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானப் பீட புதுமுக மாணவன் மீதான பகிடிவதை" எனும் தலைப்பில் 2025 மார்ச் 31 ஆம் திகதி மற்றும் 2025 ஏப்ரல் 01 ஆம் திகதிய பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயமானது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையில் அடிப்படையில் கவனம் செலுத்தியுள்ளது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டம், பகிடிவதை செய்வதானது இலங்கையின் மிகக் கடுமையான குற்றங்களில் ஒன்றாகவும் பிணை வழங்கப்படாத குற்றமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் பகிடிவதை செய்யும் அல்லது ஊக்குவிக்கும் எந்தவொரு நபரும் கைது பிடியாணை இல்லாமல் கைது செய்யப்படலாம் எனவும் ஏற்பாடுகளை கொண்டுள்ளது.

எனவே யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மேற்குறித்த பகிடிவதை சம்பவம் தொடர்பில் உடனடி சட்ட நடவடிக்கை எடுத்து அது தொடர்பிலான அறிக்கையினை எதிர்வரும் 04.04.2025 இற்கு முன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்துக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர், கோப்பாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண பிராந்திய பொலீஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையினால் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்

## யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை?



யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் இந்தியப் பிரதமரிடம் பகிரங்க கோரிக்கையொன்றை விடுத்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இக் கோரிக்கையை மீனவர்கள் விடுத்துள்ளனர்.

இதற்கமைய பிரதமர் மோடிக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் யாழிலுள்ள இந்திய துணைத் தூதுவராலயத்தில் இன்றையதினம் கையளித்துள்ளனர்.

இதன் பின்னர் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதீசன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிகையில், இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையினால் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் பல்வேறு பிரச்சனைகளையும் பாதிப்புக்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென மொடர்ச்சியாக நாங்கள் கோரிக்கை விடுத்து வந்திருக்கிறோம். ஆனால் இலங்கை இந்திய அரசுகள் இந்தப் பிரச்சனைக்கான தீர்வை ஏற்படுத்திக் கொடுக்காத நிலைமையே காணப்படுகிறது.

எனவே இலங்கைக்கு வருகின்ற இந்தியப் பிரதமர் இலங்கை இந்திய மீனவர் விவகாரத்திற்கு சரியான தீர்வொன்றை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கிறோம். அதாவது எமது கடற்பரப்பிற்குள் எக்காரணம் கொண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி வரக்கூடாது. அதனையும் மீறி வந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு இந்திய மீனவர்களால் பாதிக்கப்கட்டு வாழ்வாணாரத்தை இழத்துள்ள எமது மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமெனவும் கோரியுள்ளோம்.

மேலும் தொடர்ந்தும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு எதிராக தொடர்ந்தும் குரல் எழுப்பி முன்னரைப் போன்று போராட்டங்களை முன்னெடுப்போம் என்றார்.

# யாழ்ப்பாணத்தில் நாக பாம்பினை கைகளால் பிடித்த குருக்கள் பாம்பு தீண்டி மரணம்!

குருக்கள் ஒருவர் நாக பாம்பினை கைகளால் பிடித்தபோது அந்த பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார். இதன்போது புத்தூர், சிவன்கோவில் வீதியை சேர்ந்த கணேசக்குருக்கள் கௌரிதாசன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த குருக்கள் அராலி பகுதியில் உள்ள வாலையம்மன் கோவிலில் பூஜை செய்து வந்துள்ளார். கடந்த 31ஆம் திகதி இரவு பூஜையை முடித்துவிட்டு கோவிலுக்கு அருகேயுள்ள வீட்டிற்கு சென்று முற்றத்தில் இருந்துள்ளார். இதன்போது அங்கு வலையில் சிக்கியிருந்த நாகபாம்பை கைகளால் பிடித்துள்ளார். இதன்போது பாம்பு அவரை தீண்டியது.

இந்நிலையில் வீட்டில் உள்ளவர்களை அழைத்து போத்தல் ஒன்றினை வாங்கி பாம்பினை போத்தலினுள்ளே விட்டுவிட்டு, தன்னை பாம்பு தீண்டிய விடயத்தை கூறிவிட்டு அதன் விசத்தை இல்லாது செய்யவும் தனக்கு தெரியும் என கூறியுள்ளார்.

இருப்பினும் அவர்களின் வற்புறுத்தலினால் 1ஆம் திகதி அதிகாலை 1 மணியளவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி 2ம் திகதி புதன்கிழமை தினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

# தேசிய ரீதியாக நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் போட்டியில் 06 தங்கப் பதக்கங்களை சுவீகரித்த கிளிநொச்சி!




சமூக சேவைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 2025 ஆண்டிற்கான அங்கவீனமுற்ற நபர்களுக்கான (மாற்றுத் திறனாளிகளுக்கான) தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி 3ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் 03.04.2025 மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.



தேசிய மட்டத்தில் 25 மாவட்டத்திலிருந்தும் இதில் போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். 06 தங்கப் பதக்கத்தையும் , 10 வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று கிளிநொச்சி மாவட்டம் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தினைப் பெற்றுக் கொண்டது.

குறித்த விளையாட்டுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 21 மாற்றுத்திறனாளிகள் பங்குபற்றியிருந்தனர். குறித்த நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரும் பங்குபற்றியிருந்தனர்.

# மீள பெற முடியாத சமஷ்டி அதிகாரப் பகிர்வுக்கு ஒத்துழைப்பை வழங்குங்குங்கள்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## பாரதப் பிரதமரிடம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை!



(03-04-2025)

இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீள பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை ஏற்படுத்த பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குங்குமாறு வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 03-04-2025 அன்று கோரிக்கை அடங்கிய மகஜர் இந்திய துணைத் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட பின்னர் ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில், 2025 சித்திரை மாதம் மூன்றாம் திகதி யாகிய இன்று, இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களிலும் இயங்கும் சிவில் அமைப்புகளின் வலைப் பின்னலான வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஆகிய நாம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம், இலங்கையின் நீண்ட கால தேசிய பிரச்சினையை நிரந்தரமாக தீர்ப்பதற்கு இந்திய அரசின் பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குமாறு பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கிறோம்.

ஒரு நட்பான அயல் நாடு எனும் வகையில் இலங்கையின் நெருக்கடி காலங்களில் இந்தியா எப்போதும் உதவிக்கு வருகிறது. 2022ஆம் ஆண்டு இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய மாபெரும் பங்களிப்பை நாம் எப்போதும் நன்றியுடன் நினைவிற் கொண்டுள்ளோம்.

அவ்வாறே, 1980களில் இலங்கையின் தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கு நடுவராக இந்தியா ஆற்றிய வகிபாகத்தை யும் நினைவிற் கொண்டுள்ளோம்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டமானது குறிப்பீட்ட சில உரிமைகளை இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களுக்கும் ஒட்டுமொத்த இலங்கைக்கும் உறுதிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மாகாண ஆட்சி வழங்கப்பட்டது.

அத்துடன் தமிழ் மொழியானது இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அலுவல்கள் மற்றும் நிர்வாக மொழியாக ஏற்கப்பட்டுள்ளது.

மேலும் மாகாண உயர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்கு மேல்முறையீட்டு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரதான நோக்கமானது, தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண்பதும், இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பதுமாகும்.

எனினும், 13வது திருத்தச் சட்டமானது வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த மக்களுக்கு இறையாண்மை உரிமைகளுடன் கூடிய நிலையான அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தவில்லை.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியானவர் தனது மீயுயர் அதிகாரத்தை பயன்படுத்தி மாகாண ஆட்சியை செயலிழக்க செய்ய முடியும் என்பது இந்த மாகாண ஆட்சி முறைமையின் இன்னொரு மட்டுப்படுத்தலாகும்.

ஒரு துரதிஷ்டவசமான நிகழ்வாக, இலங்கையின் உச்ச நீதிமன்றமானது 2006 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பாவது "செல்லுபடியற்றதும் சட்டவிரோதமானதும்" எனப் பிரகடனப்படுத்தியது. இது இந்தப் பிரதேசத்தைச் சார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு ஓர் அரசியல் பின்னடைவாகும்.

13வது திருத்த சட்டம் இலங்கையின் அரசியல் அமைப்பில் உளிவாங்கப்பட்டு 35 வருடங்கள் கடந்துவிட்டவ இந்த இடைப்பட்ட காலத்தில், இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெற்று, 2009ஆம் ஆண்டு முடிவற்றது.

போரின் போதும் போர் முடிவுற்ற உடனடிக் கால கட்டத்திலும் பொது மக்கள் மீது பாரதூரமான மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான மீறல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசுகள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தாத துடன் ராணுவ மய மாக்கலையும், சிங்கள் காலணித்துவத்தையும், பௌத்த மய மாக்கலையும் விரிவாக்கினர் அத்துடன் தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமை மற்றும் கலாச்சார உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

அரா அனுசரனையுடன் கூடிய பல்வேறுபட்ட அச்சுறுத்தல்களும் அத்துமீறல்களும் தொடர்கின்றன இந்த பிரதேசங்களைச் சர்ந்த தமிழ் பேசும் மக்களின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார உரிமைகள் அரச கொள்கைகளாலும் நடை முறைகளாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

எமது கடந்த கால மற்றும் நிகழ்கால அனுபவங்களின் அடிப்படையில், 13வது திருத்தச் சட்டத்தில் காணப்படும் அதிகாரப் பகிர்வு முறையானது நிலை பேறானதல்ல எந்த நேரத்திலும் இலங்கை அரசானது மாகாண அதிகாரத்தை மீளப்பெற முடியும்.

எனவே, வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்கள் சம்'டி முறையிலான அதிகாரப் பகிர்வு முறையே எமக்கு கௌரமமான உரிமைகளுடன் கூடிய வாழ்வை உறுதிப்படுத்தக் கூடிய நிலைபேறான ஒரே முறைமை என்று திடமாக நம்புகிறோம்.



அந்த வகையில் தங்களுக்கு நல்வரவு கூறுவதுடன் இலங்கைக்கான தங்களின் உத்தியோகபூர்வ வருகையை நாம் உலர்வாக கௌரவிப்பதுடன், இலங்கையில் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீள பெற முடியாத சம்'டி முறையிலான அதிகாரப் பகிர்வை ஏற்படுந்த தங்களின் பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குமாறு இந்த பகிரங்க வேண்டுகோளை முன்வைக்கிறோம் என்றுன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை போர்க்குற்றவாளிகள் நான்கு பேர் மீது இங்கிலாந்து விதித்த தடைகளை கனடாவின் தமிழ் உரிமைகள் குழு (TRG) வரவேற்கின்றது

இலங்கை செய்திகள்
Sri Lanka News

tamil rights group

இலங்கை போர்க்குற்றவாளிகள் நான்கு பேர் மீது இங்கிலாந்து விதித்த தடைகளை தமிழ் உரிமைகள் குழு (TRG) வரவேற்கிறது. மேலும் இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் பாரதூரமான குற்றங்களுக்குப் பொறுப்பான நபர்களுக்கு எதிராக இந்த உறுதியான நடவடிக்கையை எடுத்ததற்காக இங்கிலாந்து அரசாங்கத்தை எமது அமைப்பு (TRG) முழு மனதுடன் பாராட்டுகிறது.

இது தொடர்பாக மேற்படி கனடாவின் முக்கிய அமைப்பான (TRG) விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணத் தடைகள் மற்றும் சொத்து முடக்கம் உள்ளிட்ட மாக்னிட்ஸ்கி கட்டமைப்பின் கீழ் இங்கிலாந்து விதித்த இந்தத் தடைகள், ஷவேந்திர சில்வா (இலங்கை ஆயுதப் படைகளின் முன்னாள் தலைமைத் தளபதி), வசந்த கரண்ணகோடா (முன்னாள் கடற்படைத் தளபதி), ஜகத் ஜெயசூர்யா (முன்னாள் ராணுவத் தளபதி) மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் (முன்னர் விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கிய போராளி- பின்னர் அரசாங்கம் பக்கம் தாவியவர்) இன மோதலின் போது கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் அட்டூழியங்களுக்குப் பொறுப்பான இந்த நான்கு நபர்கள் மீதும் இங்கிலாந்து தடைகளை விதித்துள்ளது. இதில் நீதிக்கு புறம்பான கொலைகள், சித்திரவதைகள் மற்றும்/அல்லது கொடூரமான பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான குற்றங்கள் அடங்கும்.

இங்கிலாந்து அரசாங்கத்தின் கொள்கை ரீதியான நிலைப்பாடு, அப்பாவி ஈழத் தமிழ் பொதுமக்களுக்கு எதிராக இதுபோன்ற கொடூரமான குற்றங்களைச் செய்பவர்கள் பொறுப்புக்கூறப்படுவார்கள் என்றும், அவர்களுக்கு தண்டனை வழங்கப்படாமல் இருப்பது பொறுத்துக்கொள்ளப்படாது என்றும் இந்தக் குற்றவாளிகளுக்கு தெளிவான மற்றும் சந்தேகத்திற்கு இடமில்லாத செய்தியை உலகெங்கும் அறியத்தந்துள்ளது.

இங்கிலாந்து அரசு விதித்த மேற்கண்ட தடைகள், குற்றவாளிகளைத் தனிமைப்படுத்துவதற்கான உலகளாவிய கூட்டு முயற்சிகளை வலுப்படுத்துகிறது, இது அமெரிக்கா மற்றும் கனடாவால் இலங்கை தனிநபர்கள் மீது விதிக்கப்பட்ட முந்தைய தடைகளை நிறைவு செய்கிறது, அவர்களில் சிலர் அரசாங்கங்களின் உயர் மட்டங்களில் உள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் இலங்கையின் ஆயுத மற்றும் பாதுகாப்புப் படைகளின் மூத்த தளபதிகள் உட்பட மற்றவர்கள். இந்தச் சூழலில், ஷவேந்திர சில்வா மற்றும் வசந்த கரன்னாகோடா ஆகியோருக்கும் அமெரிக்க அரசு ஏற்கனவே தடை விதித்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். கனேடிய அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர் முன்னாள் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராகத் தடைகளை விதித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ராஜபக்ச மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட குற்றவாளிகள் அனைவரும் அப்பாவி ஈழத் தமிழர்களின் இரத்தத்தைக் கறைபடிந்தவர்களாக உள்ளனர், சிங்கள-பௌத்த பெரும்பான்மைவாத மனநிலையால் இயக்கப்படும் கிளர்ச்சி எதிர்ப்பு என்ற போர்வையில் மிகவும் மோசமான மற்றும் மனசாட்சியற்ற குற்றங்களைச் செய்துள்ளனர். இந்த தனிநபர்களும் அடுத்தடுத்த இலங்கை ஆட்சியாளர்களும் செய்த குற்றங்கள் போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கு சமம் என்பதற்கான நம்பகமான ஆதாரங்கள் இப்போது பெருகி வருகின்றன.

குறிப்பாக இங்கிலாந்தின் பிரதமர் ஆர்.டி. கௌரவ சர் கீர் ஸ்டார்மர் எம்.பி. மற்றும் வெளியுறவு செயலாளர் ஆர்.டி. கௌரவ டேவிட் லாம்மி எம்பி. ஆகியோரின் தலைமையில் இங்கிலாந்து அரசாங்கத்தால் இந்த தடைகள் விதிக்கப்படுவது, சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகள் மற்றும் மனித கண்ணியத்தின் மதிப்புகளை நிலைநிறுத்துவதற்கான உறுதியான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது, இது தீய இலங்கை ஆட்சிகளின் கைகளில் கற்பனை செய்ய முடியாத துன்பங்களைத் தாங்கிய ஈழத் தமிழர்களுக்கு நம்பிக்கையின் கலங்கரை விளக்கத்தை காட்டி நிற்கின்றது.

மனித உரிமைகள் வாதத்தில் அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்காக இங்கிலாந்து அரசாங்கம், FCDO கொள்கை வகுப்பாளர்கள், மனித உரிமைகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தமிழ் புலம்பெயர்ந்த அமைப்புகளுக்கு நாம் எமது அமைப்பான (TRG) சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை எளிதாக்கிய மறுக்க முடியாத ஆதாரங்களை சேகரித்து சேகரிப்பதில் ஐக்கிய நாடுகள் சபை நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் விலைமதிப்பற்ற பங்களிப்புகளையும் நாங்கள் பாராட்டுகிறோம்.

மேலும். 2009 ஆம் ஆண்டு "முள்ளிவாய்க்கால் படுகொலை" மூலம் இன மோதல் ஒரு கொடூரமான முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலத்திலிருந்து 16 ஆண்டுகளுக்குப் பிறகும், மாறி மாறி வந்த இலங்கை அரசாங்கங்கள் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூழியக் குற்றங்களுக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநாட்ட எந்தவொரு நம்பகமான நடவடிக்கைகளையும் தொடங்கத் தவறிவிட்டன.

போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கு நம்பகமான ஆதாரங்கள் உள்ள இலங்கையில் உள்ள அனைத்து தனிநபர்களையும் குறிவைத்து தடைகளை விதிப்பதன் மூலம், மனித உரிமைகள் மற்றும் நீதியின் அடிப்படை மதிப்புகளை நிலைநிறுத்துவதில் முன்னணியில் இருக்கும் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் கனடாவுடன் இணைந்து, பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளைத் தொடங்குமாறு உலகெங்கிலும் உள்ள பிற நாடுகளையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மேலும், இங்கிலாந்து அரசாங்கமும் UNHRC இன் பிற உறுப்பு நாடுகளும், இங்கிலாந்து தலைமையிலான இலங்கை மையக் குழுவுடன் இணைந்து பணியாற்றவும், செப்டம்பர் 2025/60 வது UNHRC அமர்வில் OHCHR - இலங்கை பொறுப்புக்கூறல் P க்கான ஆணையை நீட்டிக்க ஒரு வெற்றிகரமான தீர்மானத்தைக் கொண்டுவருவதில் ஈடுபடவும் (TRG) அமைப்பினராகிய நாம் வலியுறுத்துகிறோம்.





இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழர்களின் இன, மத அடையாளங்களை உறுதிசெய்யுமாறு சிறீதரன் எம்.பி.கோரிக்கை!



ஈழத்தமிழர்களின் இன, மத அடையாளங்களை உறுதிசெய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடவுச்சீட்டுக்கான புகைப்படங்களை எடுக்கும் போது பெண்கள் நெற்றியில் பொட்டிடக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தை மேற்கோள் காட்டி, இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே சிறீதரன் எம்.பி மேற்குறித்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கடவுச் சீட்டுக்கான புகைப்படங்களை எடுக்கும் போது, தமிழ்ப் பெண்கள் பொட்டிடுவதும், இந்துசமய குருமாராக இருந்தால் அவர்கள் விபூதி, சந்தனம் உள்ளிட்ட மத அடையாளங்களைத் தரித்திருப்பதும் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டுமென, அகில இலங்கை அரச உரிமை பெற்ற புகைப்படப்பிடிப்பாளர் சங்கத்தினரால், வடக்கு மாகாண புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அந்தவகையில், மேற்குறித்த அறிவிப்பானது தமிழ் மக்களின் இன, மத அடையாளங்களை வலிந்து பறிக்கும் ஓர் அடிப்படை உரிமை மீறலாக உள்ளதை தங்களின் மேலான அவதானத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, தமிழர்களது மரபார்ந்த பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவே தமிழ்ப் பெண்கள் பொட்டிடும் பழக்கத்தை காலம்காலமாக பின்பற்றி வருகிறார்கள். ஒரு இனத்தின் உணர்வுநிலையோடு ஒன்றித்துப் போயுள்ள இயல்பான வாழ்வியல் விடயங்களை, தார்மீக காரணங்கள் எவையுமற்று தடுக்க நினைப்பதும், அதுசார்ந்த செயற்பாடுகளை அதிகாரரீதியாக நடைமுறைப்படுத்துவதும் மிகமோசமான அடக்குமுறையே என்பதையும், உணர்வுநிலைசார் பண்பாட்டு அடையாளப் பறிப்பென்பது எத்தகைய தாக்கங்களை உருவாக்கக்கூடும் என்பதையும் தாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

குடியகல்வுத் தேவைகளின் பொருட்டு கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஒரு ஈழத்தமிழர், கடவுச்சீட்டுக்கான புகைப்படத்தை எடுக்கும்போது தனது இனம் சார்ந்த, மதம் சார்ந்த தனித்துவ அடையாளங்களைத் துறந்தே ஆக வேண்டுமென்ற எந்தத் தேவைப்பாடும் இல்லாத நிலையில், இந்த நாட்டுப் பிரஜைகளின் அடிப்படை உரிமையை மீறும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி அறிவுறுத்தலை உடனடியாக மீளப்பெறுவதன் மூலம், தமிழ் மக்களின் தனித்துவ அடையாளங்களையும், அடிப்படை உரிமைகளையும் உறுதிசெய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

# பத்து நாட்களுக்கும் மேலாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்ட முஸ்லிம் இளைஞர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

ஸ்டிக்கர் ஒட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பத்து நாட்களுக்கும் மேலாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் இளைஞரின் குடும்பத்தினர், அவர் மீதான குற்றச்சாட்டுகளை பொலிசார் தெரிவிக்காமையால் அச்சமடைந்துள்ளனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு செய்துள்ள மொஹமட் ருஷ்டியின் தாய், அதிகாரிகள் அவருக்கு எதிராக பொய்யான வழக்கை சோடிக்கலாம் என சந்தேகிக்கிறார்.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி கொம்பனி வீதி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 23 வயதான முஸ்லிம் இளைஞன், 90 நாட்கள் தடுப்புக் காவல் உத்தரவில், பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) எச்சரிக்கையுடன் பயன்படுத்தப் போவதாக அறிவித்துள்ள தற்போதைய அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க இந்த உத்தரவில் கையொப்பமிட வேண்டும்.

"அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் இன்று வரை எமக்கு அறிவிக்காத பொலிஸார் அவர் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில் எவ்வித விளக்கமும் வழங்கவில்லை," என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர் கலாநிதி கெஹான் குணதிலக ஆகியோருக்கு புதன்கிழமை (3) அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எனது மகனைக் தடுத்து வைத்தது தவறு என நாங்கள் உறுதியாக நம்புகிறோம், மேலும் அவர் மீது அதிகாரிகள் பொய் வழக்குகளைப் பதிவு செய்ய முயற்சிப்பார்கள் என்ற அச்சம் அதிகரித்து வருகிறது. அவர் இருக்கும் சூழ்நிலை எங்கள் குடும்பத்திற்கு மிகவும் கவலை அளிக்கிறது. அவரை உடனடியாக விடுவிக்க மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிடுமாறு நாங்கள் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்," என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமதி. ருஷ்டி தனது மகனின் சிறைக்காவல் நிலைமையை விசாரணை செய்ய மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதியை அவரிடம் அனுப்ப வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். மொஹமட் ருஷ்டி "ஏதோ ஒரு வகையில் பயங்கரவாதச் செயலைச் செய்யத் திட்டமிடும் நபர் என்ற நியாயமான சந்தேகத்தின் பேரில்" கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

"இச்சந்தேக நபரின் செயற்பாடுகள் தொடர்பில் நீண்டகாலமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், வெளியாகியுள்ள உண்மைகளின் அடிப்படையில் அவர் இணையம் மற்றும் பிற முறைகளை பயன்படுத்தியமையினால் சில மன உந்துதல்களுக்கு உள்ளானவர் என்பது அவதானிக்கப்பட்டுள்ளதால், அந்த மனநிலையின் அடிப்படையில் அவர் மத தீவிரவாதத்தில் ஈடுபட்டமை தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது," என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை உலமா சபையில் முன்னிலைப்படுத்தியதாகவும், ருஷ்டி முஸ்லிமின் நிலையைத் தாண்டிய நிலை இருப்பதாகவும் அவருக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும் எனவும் சபை அறிவித்ததாகவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் அறிக்கையை உறுதிப்படுத்தாத அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை (ACJU), ருஷ்டி கைது செய்யப்பட்டமை கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயல் என வன்மையாகக் கண்டித்துள்ளது.

"நமது பிரதிநிதிகள் இந்த கைது சம்பந்தமாக காவல்துறையினரை தொடர்புகொண்டபோது, சுவர் ஒட்டி காரணமாக மாத்திரமே குறித்த இளைஞர் கைது செய்யப்படவில்லை என்றும் கூடுதல் காரணங்கள் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் கைது செய்யப்பட்டுள்ளவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான உத்தியோகபூர்வ பதிவுகளை ஜம்இய்யா கோரியுள்ளது," என உலமா சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமான மற்றும் சுயாதீனமான பலஸ்தீன அரசை ஆதரிக்கும் உலமா சபையின் அறிவிப்பு அந்த மண்ணில் நடத்தப்படும் சட்டவிரோத இனப்படுகொலையை வன்மையாகக் கண்டித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞன் ஒட்டியுள்ள ஸ்டிக்கரில் பாலஸ்தீனத்தை தாக்கியதற்காக ஃபக் இஸ்ரேல் என்ற ஆங்கில வாசகம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

மொஹமட் ருஷ்டியின் கணினி வன்பொருள், தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் கைத்தொலைபேசி குறித்து தடயவியல் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் கூறுகின்றனர்.

# தையிட்டி காணி தொடர்பான சந்திப்பிற்கென அழைத்து அநுர அரசாங்கத்தின் அமைச்சர் ஏமாற்றியதாக தையிட்டி மக்கள் விசனம் தெரிவிப்பு



- ந.லோகதயாளன்

நீதியமைச்சருடனான சந்திப்பில் தமது பிரச்சனைகள் குறித்து எந்தவிதமான விவகாரங்களும் பேசப்படவில்லை என தையிட்டி காணி உரிமையாளர்களில் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை விடுவிப்பு தொடர்பான முக்கிய கலந்துரையாடலில் அரசாங்கத்தின் சார்பாக கலந்து கொண்ட நீதியமைச்சர் ஹர்'ன நாணயக்கார உள்ளிட்ட அரச தரப்பு பிரதிநிதிகள் வெளியேறியமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், "இன்று காலை நீதியமைச்சின் கீழ் இயங்கும் தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் எனும் ஒரு அமைப்பு எம்மை தையிட்டியில் சந்தித்து காணி உரிமையாளர்களின் காணி உறுதி, தோம்புகள் உள்ளிட்ட ஆவணங்களை ஆராய்ந்து அவற்றின் நகல் பிரதிகளை பெற்றுக்கொண்டனர். மேலும் குறித்த அமைப்பினர் விகாராதிபதியுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் நாகவிகாரையில் நீதியமைச்சர் தலைமையிலான ஓர் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் நீதியமைச்சரின் ஊடாகவே தீர்க்கப்பட வேண்டும். எனவே குறித்த எமது ஆவணங்கள் ஆராயப்பட்டு உரிய தீர்வு வழங்கப்படும் என்பதாகவே எமக்கு கூறப்பட்டிருந்தது.

ஆனாலும் நீதியமைச்சர் தனது தலைமை உரைக்குப் பின்னர் தேர்தல் காலத்தில் இவ்வாறான கலந்துரையாடல்களில் தம் ஈடுபடுவது பொருத்தமற்றது எனக் கூறி வெளியேறியிருந்தார். இதனால் காலையில் நாம் சந்திப்புகளை மேற்கொண்ட அதே குழுவினருடனேயே மீண்டும் கலந்துரையாடல் ஈடுபட வேண்டிய நிலை காணப்பட்டிருந்தது.

இந்த இரு கூட்டங்களிலும் பாதிக்கப்பட்ட தரப்பில் இருந்த சிலர் வேட்பாளர்களாக இருந்தமையால் பங்கெடுக்க அனுமதிக்கப்படவில்லை. சட்ட விதிகளுக்கு அமைவாக நாம் இதனை எதிர்க்கவில்லை.

அமைச்சரின் இக்கலந்துரையாடலுக்கான வருகையை நாம் வரவேற்றத்துடன் எமது பிரச்சனைகள் தீர்க்கப்படும் என நம்பியிருந்தோம். ஆனாலும் அவர் எமது பிரச்சனைகள் குறித்து எதுவுமே பேசவில்லை.


அமைச்சரின் வெளியேற்றத்தின் பின்னர் மதகுருக்களின் போதனைகளே அங்கு நடைபெற்றிருந்தது. ஆனாலும் மிகுந்த சவாலுக்கு மத்தியில் அவர்களுக்கு இது ஒரு சட்ட விரோத கட்டடமே தவிர இந்த விவகாரத்துக்கு எவ்வித மதச் சாயங்களும் பூச வேண்டாம் எனும் எமது தரப்பு நியாயங்களையும் கோரிக்கைகளையும் அவர்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

இதேவேளை இக்கலந்துரையாடலுக்கு பௌத்த மகா சங்கத்தை சார்ந்த நான்கு பிரதிநிதிகள் வந்திருந்ததுடன் பொருத்தமற்ற தமது தரப்பு நியாயங்களை முன்வைத்திருந்தனர்.

அவர்களுக்கும் எமது தரப்பு பத்திகளை தெளிவாக நாம் முன்வைத்திருக்கிறோம். இந்நிலையில், தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சார்ந்தவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இவ்விவகாரம் தொடர்பான தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் அதேவேளை, இருதரப்பு நியாயங்களையும் பரிசீலித்து ஒரு தீர்வை எட்டவுள்ளதாக உறுதியளித்துள்ளனர். பொறுத்திருந்து பார்ப்போம்" என தெரிவித்துள்ளார்



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1140

## (வரலாறும் மரபும்)

## நாச்சிஅம்மன் கோயில்

### பாணன் குளம், நல்லூர்

ஈழத்தின் வடபால் அமைந்துள்ள பிரதேசம் எங்கும், கோயில்கள் பரந்து காணப்படுகின்றன. காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற அனர்த்தங்களால், இக்கோயில்கள் அழிவதும், அழிக்கப்படுவதுமாகக் காணப்பட்ட போதிலும், மீண்டும் மீண்டும் இக்கோயில்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டு, முன்னைய நிலையை விட மேலோங்கிக் காணப்படுவதை, கண்கூடாகக் காணலாம். இத்தகைய நிலைக்கு இப்பிரதேசங்களில் வாழுகின்ற சைவப் பெருங்குடி மக்களின் இறைபக்தியும், சமய ஆர்வமும், நம்பிக்கையுமே காரணமாகும். இவ்வாறான நிலையைப் பெற்று, இன்று பல நிலையிலும் வளர்ச்சியடைந்து காணப்படும் ஆலயங்களுள் ஒன்றாக, நல்லூர் பிரதேசத்தில் அமைந்துள்ள, பாணன் குளம் நாச்சிஅம்மன் கோயில் விளங்குகின்றது.

ஈழத்தின் வடபால் தமிழர்களின் இராசதானியாக, யாழ்ப்பாண இராச்சியம் காணப்பட்டது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக விளங்கியது நல்லூராகும். பல்வேறு புகழ்பெற்ற ஆலயங்கள் இப்பிரதேசத்தின் வரலாற்றையும், தொன்மையையும் எடுத்தியம்புவனவாகக் காணப்படுகின்றன. நல்லூர் பிரதேசத்தில் அருளும் புகழும் கொண்டு விளங்கும் ஆலயங்களுள் ஒன்றாக, நல்லூர் பாணன் குளம் நாச்சிஅம்மன் கோயில் காணப்படுகின்றது.

கச்சேரி, நல்லூர் வீதியில் அமைந்துள்ள இவ்வாலயத்தின் வரலாறு, யாழ்ப்பாணம் எனப்பெயர் உருவாவதற்குக் காரணமாயிருந்த, பாணர் மரபினரோடு தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. தமிழ் மன்னர்களின் அரச சபையில் யாழ்வாசித்து, பண்ணிசை பாடி, மன்னர்களை மகிழ்வித்தவர்கள் பாணர் என்னும் மரபினர் ஆவர். இம்மக்கள் தமிழ் இராசதானியாகிய நல்லூரிலே குளம் அமைத்து, அவ்விடத்திலேயே குடியேறி வாழ்ந்துள்ளனர். அக்காலம் முதல் இன்றுவரை இப்பிரதேசம் பாணன் குளம் என அழைக்கப்படுகின்றது.

பாணன் குளம் என்னும் இடத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் நாச்சிஅம்மன் ஆலயம், மிகவும் தொன்மை வாய்ந்தது. இவ்வாலயம் வேலன் என்பவருக்குச் சொந்தமான, திடர் நிலத்திலே, சிறு குடிசையாக ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாலயத்தின் ஆரம்பகால வரலாறு, இவ்வாறுதான் காணப்படுகின்றது. பிற்காலத்திலே பாடப்பட்ட திருவூஞ்சல் பாடலில், வேலன்பிட்டி நாச்சிஅம்மன் என்ற குறிப்பும் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான கருத்துக்கள் இவ்வாலயத்தின் ஆரம்பகால நிலையை எடுத்தியம்புவனவாகக் காணப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் தொன்மைமிகு ஆலயங்களாக விளங்கியவை, திராவிட மரபு தழுவிய பூசை முறைகளை பின்பற்றியவையாக விளங்கின. இப்பூசை முறைகளிலே பூவும், நீரும் முக்கியமாக இடம்பெற்றதோடு, சைவப் பூசகர்களால் ப ூசைகள் நிகழ்த்தப்பட்டது. பிற்காலத்தில் இம்முறை மாற்றமடைந்து, ஆகம முறைப்படியான மரபுகள் இடம்பெறும் ஆலயங்களாக விளங்குகின. இவ்வாலயத்திலும் இம்மாற்றத்தை அவதானிக்க இயலும்.

குடிசைக் கோயிலாகக் காணப்பட்ட இக்கோயிலில் பல வருடங்களாக வேலன் வழிவந்த சந்ததியினரே, பூசை வழிபாடுகளை நடத்தியுள்ளனர். இந்நிலையில், கோயிலின் வளர்ச்சியில் ஆலயச் சூழலிலுள்ள சைவமக்கள் பல்வேறு உதவிகளையும் செய்து, பெரும்பணி ஆற்றியுள்ளனர். ஆகம முறைகள் இடம்பெறாத காலமாக அமைந்திருந்தமையால், சைவ மக்களின் ஆதரவுடன், ஆசார சீலர்களான சைவப் பூசகர்களைக்கொண்டே, ஆலய பூசைகள் நிறைவேற்றப்பட்டது. எனினும் இவ்வாலயத்திற்கென எதுவித வருமானமும் இல்லாத காரணத்தால், தொடர்ந்து பராமரிப்பதில் பல தடைகள் காணப்பட்டது. இக் காரணத்தினால், வெள்ளி. செவ்வாய் நாட்களில் மட்டுமே விளக்கேற்றி, அமுது படைத்து, கற்பூர தீபங்காட்டி வழிபாடுகள் இடம்பெற்றது.

ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னர், இவ்வாலயத்தில் ஆகம முறை தழுவிய, புவனேஸ்வரி அம்சம் கொண்ட, அம்மன் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டதென, கர்ணபரம்பரைக் கதையும் வழக்கிலே காணப்படுகின்றது. அத்தோடு, இவ்வாலயத்தில் பணிபுரியும் பூசகர்கள் ஏதேதோ காரணங்களால் ஆலயத்தை விட்டு விலகிச் செல்வது, வழமையாகக் காணப்பட்டது. இதன் காரணத்தை அறியாது வருந்திய சைவ மக்கள், 1931 ஆம் ஆண்டு, ஆலயத்தின் பரிபாலன பொறுப்பை, அராலி மேற்கு, ஆறுமுகம் அம்பலவாணர் என்ற அர்ச்சகரிடம் ஒப்படைத்தனர். இவர் ஆசாரசீலராகவும், சமயம் மற்றும் புராணங்களைக் கற்ற மேதையாகவும் விளங்கியுள்ளார்.


இவரது இடைவிடா முயற்சியால் நாச்சிஅம்மன் ஆலயம் பல வழிகளிலும் சிறப்புற்று விளங்கியது. இவர் நகரிலுள்ள வியாபாரிகளைச் சந்தித்து, விளக்கேற்றுவதற்குரிய தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொண்டார். இவர்கள் நீண்டதோர் மண்டபத்தையும் கட்டிக் கொடுத்தனர். இவர்களது உதவியால் நாச்சிஅம்மன் வீதிவலம் வருவதற்கென, குதிரை வாகனமொன்றும் கோயிலுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவ்வாறாக வளர்ச்சியடைந்து வரும்வேளையில், ஆலய கருவறையும் மண்டபமும் பழுதடைந்து காணப்பட்டது.

*வளரும்...*

உலக செய்திகள் World News

# ஈழத்து அகதியாக தமிழ்நாட்டில் வசிக்கும் நீச்சல் வீராங்கனை அன்புமகள் தனுஜாவிற்கு குடியுரிமை வழங்க வேண்டும்!

## "செந்தமிழன்" சீமான் விடுத்துள்ள கோரிக்கை



இந்த விடயம் தொடர்பாக அண்மையில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து கடந்த 2006ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் வசித்து வரும் அன்பு மகள் தனுஜா இந்திய அளவிலான நீச்சல் போட்டிகளில் பங்கேற்று 120க்கும் மேற்பட்ட தங்கப் பதக்கங்களை வென்று சாதனை புரிந்துள்ள போதிலும், இந்திய ஒன்றிய அரசு இன்றுவரை குடியுரிமை வழங்க மறுப்பதால் பன்னாட்டு போட்டிகளில் பங்கேற்க முடியாமல் புறக்கணிக்கப்படுவது மிகுந்த மனவேதனையளிக்கிறது. கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது தமிழ்நாட்டில் வசிக்கும் ஈழத்தமிழ்ச்சொந்தங்களுக்கு குடியுரிமை பெற்றுத்தரப்படும் என்று வாக்குறுதியளித்த திமுக அரசு, தற்போதுவரை அதனை நிறைவேற்றாமல் ஏமாற்றுவது வன்மையான கண்டனத்துக்குரியது.

இலங்கையை ஆளும் சிங்கள இனவாத அரசின் கோர இன அழிப்புக்கு ஆளாகி, இனப்படுகொலையை எதிர்கொண்டு, அளவில்லா அழிவுகளுக்கும், இழப்புகளுக்கும் முகங்கொடுத்து வீட்டை இழந்து, நாட்டை இழந்து, உறவுகளைப் பறிகொடுத்து, உரிமைகளும், உடைமைகளும் அற்றுப்போய் நிர்கதியற்ற நிலையில் இப்பூமிப்பந்தில் உயிர்வாழ்வதற்கு ஒரு இடம் கிடைக்காதா? என ஏக்கத்தோடும், தவிப்போடும் பத்து கோடி தமிழ் மக்களின் தாயகமாக விளங்கும் தாய்த்தமிழகத்தை நாடிவந்த ஈழச்சொந்தங்களை, இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசும், தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசும் குடியுரிமை வழங்க மறுத்து சிறிதும் மனிதநேயமின்றி ஏதிலிகளாக முகாம்களில் அடைத்துவைத்து வதைப்பது கொடுஞ்செயலாகும்.

தமிழினத்திற்கு யாதொரு தொடர்புமில்லாத பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளும், கனடா, ஆஸ்திரேலியா போன்ற மேலை நாடுகளும் தம்மை நாடிவந்த தமிழ்மக்களுக்கு அடைக்கலமளித்து, அரவணைத்து, ஆதரித்து அனைத்துவித அடிப்படை உரிமைகளையும் உறுதிசெய்து வாழ்வளிக்கின்றன. அந்நாட்டின் விளையாட்டு வீரர்களாக, அரசியல் பிரதிநிதிகளாக வாய்ப்பு வழங்கப்பட்டு மிகுந்த மரியாதையுடன் வாழ்விக்கப் படுகின்றனர். அரபு நாடுகளும் திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு குடியுரிமை வழங்கி சிறப்பிக்கின்றன.

ஆனால், ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து திருச்சியில் வாழும் நீச்சல் வீராங்கனை அன்புமகள் தனுஜா விளையாட்டுப் போட்டிகளில் 120க்கும் மேற்பட்ட தங்கப்பதக்கங்கள் வென்ற பிறகும், இந்திய குடியுரிமையைக் கேட்டு இன்றுவரை சட்டப்போராட்டம் நடத்தி வருவது பெருங்கொடுமையாகும். பத்துகோடி தமிழர்கள் தனித்த பெரும் தேசிய இனமாக, நிலைத்து நீடித்து வாழும் இந்நாட்டில், எங்கள் தொப்புள்கொடி உறவுகளான ஈழச்சொந்தங்கள், கல்வி - விளையாட்டில் சிறந்து விளங்கினாலும் அவர்களுக்கான உரிய அங்கீகாரத்தை தராமல் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என விரட்டுவது தமிழ்த்தேசிய இனத்தையே அவமதிப்பதாகும்.

இலங்கையிலிருந்து வந்த ஈழச்சொந்தங்கள் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களா? பாகிஸ்தான், பங்களாதேசிலிருந்து அகதிகளாக வந்த இந்துக்களைச் சட்டவிரோதமாகக் குடியேறிவர்களென இந்நாடு கருதுமா? சீனாவிலிருந்து அகதிகளாக வரும் திபெத்திய மக்களை அவ்வாறு கூறி துரத்துமா? திபெத்தியர்களுக்கு இந்நாடு அளிக்கும் வசதிகள், சலுகைகள் என்னென்ன? அவர்களிடம் காட்டும் அக்கறை, பரிவு, பற்றில் நூற்றில் ஒரு பங்குகூட, நாட்டுக்குப் பெருந்த பொருளாதாரப் பங்களிப்புகளைச் செய்யும் தமிழ்ப்பேரினத்தின் தொப்புள்கொடி உறவுகளான ஈழத்தமிழர்களிடம் காட்ட மறுப்பதேன்? அவர்கள் தமிழர்கள் என்பதற்காக இந்த நாடு எந்தக் கூடுதல் சலுகையும் அளிக்காவிட்டாலும், குறைந்தபட்சம் நம்மைப் போன்ற இரத்தமும் சதையும் கொண்ட சக மனிதர்கள் என்ற அடிப்படையிலாவது அவர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்கி இருக்கலாமே?







ஆகவே, 120க்கும் மேற்பட்ட தங்கப் பதக்கங்கள் வென்று சாதித்துள்ள நீச்சல் வீராங்கனை அன்புமகள் தனுஜா உள்ளிட்ட தமிழ்நாட்டில் வாழும் ஈழத்தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் குறைந்தபட்சம் இரட்டை குடியுரிமை வழங்கவாவது, தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தவாறு திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் சீமான் அவர்கள் தெரிவித்துள்ளார்.

உலக செய்திகள்
World News


# தனுஷ்கோடி கடல்வழியாக இராமர் தீடைகள் நோக்கி நீந்திச் செல்ல முற்பட்ட அமெரிக்கப் பிரஜை இந்தியாவின் தனுஸ்கோடியில் கைது

- ந.லோகதயாளன்

தனுஷ்கோடி கடல்வழியாக இராமர் தீடைகள் நோக்கி நீந்திச் செல்ல முற்பட்ட அமெரிக்கப் பிரஜை மீண்டும் திருட்டுத் தனமாக முயன்றதனால் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்கா, (USA) மிஸ்ஸிஸ்ஸிப்பியை சேர்ந்த லுச்சிபர் எவெரிலவ், தனுஷ்கோடி வழியாக கடலில் இறங்கி ராமர் பாலம் வரையில் நீந்திச் செல்ல முயன்றதாக கடந்த 24 ஆம் திகதி தமிழக காவல்துறையினர் பிடித்து காவல் நிலையம் கொண்டு சென்று விசாரித்தனர்.







விசாரணையில் அமெரிக்கப் பிரஜை ஆன்மீக பயணமாக உத்திரபிரதேசம் கும்பமேளாவிற்கு சென்று அங்கிருந்து ராமேஸ்வரத்துக்கு வந்ததாகவும் பின் கன்னியாகுமரி செல்ல இருப்பதாகவும் தெரிவித்திருந்தோடு அதன்போது தீடை-களை பார்க்க விருப்பப்பட்டதனாரேயே அந்த முயற்சியை மேற்கொண்டதாக கூறியதற்கு அமைய தனுஷ்கோடி கடல் பகுதி தடை செய்யப்பட்ட பகுதி எனவும் மீண்டும் அதில் நீந்த முயற்சிக்க வேண்டாம் என எச்சரித்து அவரை பொலிஸார் திருப்பி அனுப்பியிருந்தனர்.

இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட அதே அமெரிக்கப் பிரஜை இரகசியமான முறையில் மீண்டும் தனுஷ்கோடி வந்து இரகசியமான முறையில் கடலிற்கு செல்ல முற்பட்டபோது தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டதோடு விளக்க மறியலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.




# அவுஸ்த்திரேலியாவின் சிட்னி மாநகரில் நடைபெற்ற எழுத்தாளரும் பேராசிரியருமான ஆசி. கந்தராஜாவின் பவளவிழா!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

சிட்னியில் பிரபல எழுத்தாளரும், பேராச-ிரியருமான ஆசி. கந்தராஜாவின் பவள விழா இம்மாதம் மார்ச் 29 ஆம் திகதி சனிக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் முன்னாள் மாணவரான பேராசிரியர் ஆசி. கந்தராஜா, தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பினை கௌரவிக்கும் முகமாக சிட்னித் தமிழ் இலைக்கிய ஆர்வலர்கள் அமைப்பு இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இவ்வாண்டு தனது பவளவிழாவை கொண்டாடும் பிரபல எழுத்தாளரும், பேராசிர-ியருமான ஆசி. கந்தராஜாவுக்கு சிட்னியில் பிளாக்டவுண் உயர்தர ஆண்கள் பாடசாலை வளாகத்தில் பெருந்திரளான தமிழ் இலைக்கிய ஆர்வலர்களால் கௌரவிப்பு விழா சிறப்புற நடைபெற்றது.


பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வினை தமிழ் இலக்கிய ஆர்வலரான திரு. திருநந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. அத்துடன் திருமதி. சௌந்தரி கணேசன், திரு. நரேன் நரேந்திரநாதன், திரு. நாகேந்திரம், சட்டத்தரணி செ. ரவீந்திரன், திருமதி. இந்துமதி சிறிநிவாசன், பேராசிரியர் பிரவீணன் மகேந்திரன், டாக்டர் வாசுகி சித்ரநேசன் மற்றும் பலர் சிறப்புரை ஆற்றினார்கள்.

புகலிட தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ் பாடசாலைகளில் தமிழ் மொழி தழைத்தோங்கவும் நீண்டகாலமாக அவுஸ்திரேலியாவில் பேராசிரியர் ஆசி. கந்தராஜா பெரும் பணி ஆற்றி வருகிறார். உயிரியல் தொழில்நுட்பவியல், விவசாயம், தாவரவியல் பூங்கனியியல், துறைகளில் பட்டப்படிப்பு மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகளை நிறை-வு செய்த பின்னாளில் பேராசிரியராக சிட்னி பல்கலைக்கழகங்களில் பேராசிரியராக பணயாற்றியவர். அத்துடன் இலங்கை, உட்பட சில நாடுகளிலும் வருகை தரு பேராசிர-ியராக பணியாற்றி வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாயக மண்ணின் வாசத்தை நினைவூட்டும் பேராசிரியர் ஆசி. கந்தராஜாவின் படைப்புக்கள் பல விருதுகளையும் பெற்றுள்ளது. தமிழ் அறிவியல் இலக்கியத்தின் முன்னோடியாக திகழும் பேராசிரியர் ஆசி. கந்தராஜா இளம் பராயத்தில் கிழக்கு ஜேர்மனி பல்கலைக்கழகத்தில் புலமைப்பரிசில் பெற்று அங்கு உயர்கல்வியை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு ஜேர்மனியில் தான் கற்றகாலத்தில் 1970 களில் பெற்றுக்கொண்ட அரசியல் அனுபவங்களை பல வருடங்களுக்குப் பிறகு, "அகதியின் பேர்ளின் வாசல்" என்ற நாவல் சர்வதேச அரங்கில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அத்துடன் பேராசிரியர். ஆசி. கந்தராஜாவின் சில சிறுகதைகள் ஆங்கிலத்திலும் (Horizon) சிங்களத்திலும் (ஹெய்க்கோ) வெளிவந்துள்ளன.

சிட்னியில் நிகழ்ந்த பேராசிரியர் ஆசி. கந்தராஜாவின் பவள விழாவ-ில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு தங்களது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் பேராசிரியருக்கு தெரிவித்துக் கொண்டனர்.











# தென் கடலில் கப்பலின் பயணித்துக்கொண்டிருந்த சீன நாட்டவர் நோய்வாய்ப்பட்டதனால் சிகிச்சைக்காக கரை சேர்த்த இலங்கை கடற்படையினர்

இலங்கை செய்திகள்
Sri Lanka News




இலங்கைக்கு தெற்கே, காலியில் இருந்து 63 கடல் மைல் (சுமார் 116 கி.மீ) தொலைவில் உள்ள கடல் பகுத-ியில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக ஆபத்தான நிலையில் இருந்த MV AE Neptune என்ற கப்பலின் பணிக் குழுவைச் சேர்ந்த சீன நபர், கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் ஒருங்கிணைப்புடன் விரைவாக கரைக்கு அழைத்து வரப்பட்டு சிகிச்சைக்காக 30-03-2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தென் கடற்பகுதியில் பயணித்து கொண்டிருந்த MV AE Neptune கப்பலின் பணிக்குழுவில் இருந்த சீன நாட்டவர் ஒருவர் கப்பலின் இயந்திர அறையில் சரிந்து விழுந்து ஆபத்தான நிலையில் இருந்துள்ளார். அந்த சீன நபரை கரைக்கு கொண்டு வர கடற்படையினை உதவுமாறு, அந்த கப்பலில் இருந்து கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திற்கு அறிவிப்பு செய்யப்பட்டது. இந்த அறிவிப்புக்கு கொழும்பு கடல்சார் தேடுதல் மற்றும் மீட்புப் பிரிவினர் உடனடியாக பதிலளித்தனர். ஆபத்தான நோயாளியை-யக் கரைக்குக் கொண்டுவருவதற்கு மருத்துவக் குழுவுடன் கடற்படைக் கப்பலை அனுப்ப ஒருங்கிணைப்பு மையம் ஏற்பாடு செய்தது.



இதன்படி, ஆபத்தான நோயாளியை ஏற்றிச் சென்ற MV AE Neptune கப்பல் காலி துறைமுகத்திற்கருகில் வந்தடைந்த பின்னர், நோ-யாளி கப்பலில் இருந்து கடற்படைக் கப்பலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர், அடிப்படை முதலுதவிகளை வழங்கிய கடற்படையினர் (2025 மார்ச் 30) அவரை காலி துறைமுகத்திற்கு அழைத்து வந்து சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

# The Role of Love in Varushamellam Vasantham, an Appreciation of Late Actior MANOJI BARATHYRAJA

**By: K. ANANTHANATHAN, MA, MSW, RSW REGISTED SOCIAL WORKER WITH OCSWSSW**



Introduction:

I am a fan of great poems and beautiful cinema songs like "Enge Antha Vennila" song Where's that Moon?" My fandom is because the song hits on a primary theme in Indian cinema songs around love being part of a complete life. This idea very well reflected in Tirukkural and Maha Kavi Subramanya Bharath Iyar who perceived life is whole and complete. According to Thiruvalluvar and Bharath Iyar the essence of human life is love.

The Varushamellam Vasantham (2003) film's story revolves around two brothers, Raja and Ramesh. Raja is dark, uneducated, and unemployed and has been ridiculed by his thatha (grandfather). Raja, according to the movie, is jobless and always wastes his time with his friends. Meanwhile his brother Ramesh is well educated, handsome, and has a well-paying job. Both fell in love with Latha, a distant relative living in Mumbai and visiting their house. The two brothers compete to win over Latha's love. An unemployed Raja sacrifices his love for a girl who is engaged to marry his brother but ends up earning the affection of his grandfather.

With this summary of the film story now we turn into the entire song (Song lyrics in English):

"Where is that, Moon? Enge Antha Vennila? Oh! Moon! Where are You?

It changed a stone into a fruit and Changed rock into a flower.

Where is that, Moon? I was walking on the ground

Now, I'm flying in the sky.

That's because of you

That's because of you (2)

I was night but now

I've become day.

That's because of you.

I have just one heart

I'm happy to give it to you.

I've just one life.

It's a boon to give it to you.

Even if you forget or

You're always refuse my eternal

Flame of love

When I drench in the rain

You become my umbrella

When I walk in the scorching Sun

You become my shade.

When I'm thirsty you become water

When I'm filled with sorrow you become my mother

When fishes swim in the river

It does not experience any pain

Your thoughts swim in my heart

But there is no pain for me

Whether you're there or not

I will live with your love

Whether you're there or not

I'll live with your love.

Your love is enough for me.

Where is that Moon (Enge andha Vennila)

She turned a stone into a fruit

And thorn into a flower

Enge Andha Vennila

Whether you are there or not

Your Love is enough for me

Mirror reflect the appearance only

Won't you reveal what's in my heart

The breeze which tells stories to the flowers

Won't it convey my love for you

Won't our auspicious wedding day come soon

Won't my love reach the shores

Oh! Moon, where are you?

You appeared when I fell in love. "

Jeeva Lines of the above song:

Mazhaiyil Nanaigiran

Kudaiyaai Varugiraai

Veyilil Nadakiren

Nizhalai Varugiraai

Thagam Engiren

Neerai Varugiraai

Sogam Engiren

Thaaiyaai Varugiraai

Nadhigalil Meengal

Needhuthamma

Athil Nedhikoru Vazhiyum Illaiyamma

Unninaivugal Idhayathil Needhuthamma

Athil Enokoruvazhiyum Illaiyamma

Nee Irunthal Enna Pirinthal Enna

Kathal Enaku Pothumammaa

EnKathal Enaku Pothumammaa

Uruvathai Kattidum Kannadi Enulathai

Kattida Kodatha

The above Jeeva lines of the song reflected the whole main ideas of the movie's story.



Conclusion:

The Tamil tradition always emphasizes the essence of Religion (Human Life) is LOVE they further says through their texts that universality of REAL LOVE is an unconditional LOVE that is the great force or essence of Religion or Human Life. Also> this same idea is reflected in Tirumala's Tirumanthiram as well. "Ignorant people say that LOVE and GOD are different. But they do not know that LOVE and GOD are one when they came to know that LOVE and GOD are one, they rest contented in GOD as LOVE "– Tirumanthiram Verse – 270. This is the learning lesson for the Readers should learn from this Movie, particularly the song Enge Antha Vennela and that is the purpose of this small article how it's expressed that idea. For that purpose, I would argue how the concept of LOVE plays a vital role in human life. Therefore, this should be our guiding light and coping with our day – to – day living principle and beliefs in our life living in a multi – cultural Canadian society.

This article is dedicated to loving memory of the late Manoj Bharathiraja who recently passed away on March 25, 2025. He was the main charter of this song and sunshine for his wife Nanthana for over 25 years, and she still suffered from his loss/ untimely death or sudden death. In his short lifetime, he showed us how to be selfless, kind, loving, thoughtful, and generous to everyone he came across in his lives. He enjoyed the arts and cinema acting, directing, and wanted all people, especially his loved ones, to appreciate the beauty of cinema acting and directing, music singing, and dance because he was a well-trained musician and actor from the University College Theater Studies in the USA.

## அன்னை நீ இல்லாது போனால் (நிலைமண்டில ஆசிரியப்பா)

கருவில் என்னைக் களிப்புடன் சுமந்து
உருவம் ஒன்றை மனதிலே கண்டாய்
ஐயிரு திங்கள் அங்கம் சுமந்து
பயந்து நடந்து பக்குவம் பார்த்தாய்
வெளிவரா என்னிடம் வேண்டி நின்றாய்
வெளிர்நிற உள்ளத்து விருப்பம் யாவையும்
அசைவுகள் கண்டே ஆனந்தம் கொண்டாய்
இசையைக் கேட்கவே ஏற்றவழி செய்தாய்
நாட்கள் செல்லவே நான்வெளி வரும்வரை
பாட்டுப் பாடியே பரவசம் கொண்டாய்
மாதமோ நெருங்கி வரவே மனதினில்
ஆதங்கம் அடைந்தாய் அச்சம் கொண்டே!
உருண்டு படுக்க உடல்தான் விரும்பியும்
நெருங்கும் நாட்களை எண்ணித் தவிர்த்தாய்
எனது உதைகள் இம்சை கொடுத்தும்
மனதிலே மட்டிலா மகிழ்ச்சி பெற்றாய்
திங்களோர் மாற்றம் தேகத்தில் தெரியவே!
பங்கம் வராமல் பார்த்து நின்றாய்
உதிரம் சொட்டிட உனக்கும் வலிக்க
அதனைத் தாங்கி ஆர்வமாய்ப் பெற்றாய்
பாலகன் எனது பால்முகம் காணவோ?
பாலை எனக்குப் பாசமாய் ஊட்டினாய்
என்னுள் துடிக்கும் இதயத்தை விடவும்
உன்னுள் இருக்கும் உறுப்புத் துடித்ததே!
தந்தையின் கையிலே என்னைத் தந்தே!
சிந்தை மகிழச் சிரித்து நின்றாய்
பாரினில் உனைப்போல் பரிவுத் தெய்வம்
சேரினில் சிறக்கும் வாழ்வு எவர்க்குமே!
தரணியில் தாய்நீ இல்லாது போனால்
உரமாய் ஓங்குமா? இப்புவி வாழ்வே!

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மூர்வீதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் மனித பாவனைக்கு உதவாத வகையில் சுகாதார சீர் கேட்டுடன் உணவு பொருட்கள் தயாரிப்பு

## மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் நடவடிக்கை



(02-04-2025)

மன்னார் மூர்வீதி பகுதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் மனித பாவனைக்கு உதவாத வகையில் சுகாதார சீர் கேடுகளுடன் உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு மன்னாரில் உள்ள உணவகங்களுக்கு விற்பனைக்காக வழங்கப்பட்டு வந்த நிலையில் குறித்த உணவு தயாரிக்கும் பாழடைந்த வீட்டை 2ம் திகதி அன்றையதினம் புதன்கிழமை மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தலைமையிலான குழுவினர் சுற்றி வளைத்துள்ளனர்.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக மன்னார் மூர்வீதி பகுதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் உணவு பொருட்கள் தயாரிக்கப்படுவதாகும் அங்கு பாரிய துர்நாற்றம் வீசி வருவதாக மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்றையதினம் புதன்கிழமை காலை அப்பகுதிக்குச் சென்ற மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தலைமையிலான குழுவினர் மனித பாவனைக்கு உதவாத ஒரு தொகுதி உணவுப் பொருட்களை மீட்டுள்ளனர்.

மன்னார் மூர்வீதியில் மக்கள் வசிக்க முடியாத நிலையில் காணப்பட்ட குறித்த வீட்டில் பாரிய அளவிலான உணவு பொருள்கள் தயாரிக்கப்பட்ட மை கண்டு பிடிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் இருந்து மனித பாவனைக்கு உட்படுத்த முடியாத சுகாதார வசதிகள் எவையும் முன்னெடுக்காத நிலையில் உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு வந்தமை சுகாதார வைத்திய அதிகாரிகள் குழுவினரால் கண்டு பிடிக்கப்பட்டது.

உணவு பாதுகாப்பு சட்டத்திற்கு எதிராக குறித்த வீட்டில் உணவு பொருட்கள் தயாரிக்கப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தலைமையிலான குழுவினர் அங்கிருந்து மனித பாவனைக்கு உதவாத வகையில் தயாரிக்கப் பட்ட உணவு பொருட்களை கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஒரு தொகுதி உணவுப் பொருட்களை நீதிமன்றத்தின் அனுமதி பெற்று அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், எவ்வித அனுமதியும் இன்றி மனித பாவனைக்கு உதவாத வகையில் உணவு தயாரித்த குறித்த நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் தயாரிக்கப் படுகின்ற உணவுப் பொருட்கள் மன்னார் பகுதியில் உள்ள பல்வேறு உணவகங்களுக்கு விற்பனைக்காக வழங்கப்பட்டமையும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தெரிவித்தார்.







# நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிகச் செயலாளர் – யாழ்ப்பாண அரசாங்க அதிபர் சந்திப்பு

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிகச் செயலாளரும், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகமும், முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருமான திரு. க. மகேசன் அவர்கள் 3ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் (03.04.2025) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு வருகைதந்து அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுச் செயலகத்தினால் நடைமுறைப்படுத்திவரும் திட்டங்களின் முன்னேற்றங்களைக் கேட்டறிந்து கொண்டார்.




MORTGAGE
FINANCIAL SOLUTIONS
"The best time to buy real estate was yesterday.
The next best time is today."
RESIDENTIAL
VACANT LAND
INDUSTRIAL
COMMERCIAL
CONSTRUCTION
OUR SERVICE
• Purchase
- Builder Purchase
- MLS Purchase
- Private Purchase
• Equity line of Credit
• Refinance
• Renewal
NESAN
Subramaniam
CALL US
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332
Scotiabank
FIRST NATIONAL FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
UTHAYAN உதயன்
FRUITS HABY பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519



மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்



Trinity Thaiyal
Tailoring and Alteration Services
Mary James: (647) 467-1410
Located: Neilson and Sheppard
நாம் வழங்கும் தையல் சேவைகள்:
சாறி பிளவுஸ், சல்வார், லெங்கா, பாவாடை, ஆண்களுக்குரிய ஆடைகள் தைத்தல் மற்றும் பல தையல்கள் வேலைகள், அத்துடன் உங்கள் சேலைகள் அழகாக உடுக்கக் கூடிய வகையில் Pleating செய்தல்
Instagram: @trinitythaiyal



உதயம் 1513 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday April 4, 2025


## Ontario's Minister Raymond Cho hosted 'Appreciation Night' with his supporters and Volunteers

# ஒன்றாரியோ மாகாண அமைச்சர் ரேமன் சோ நடத்திய "நன்றி தெரிவிக்கும் இரவு" நிகழ்வு





ஒன்றாரியோ மாகாண அமைச்சர் ரேமன் சோ அவர்கள் அண்மையில் நடத்திய - நன்றி தெரிவிக்கும் இரவு" நிகழ்வு நிகழ்ச்சியில் அவரது ஆதரவாளர்கள் மற்றும் தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஒத்துழைத்த தொண்டர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பெற்றனர். மேற்படி நிகழ்வில் பல மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தார்கள். ஒன்றாரியோ மாகாணத்தின் மின்சக்தி மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர் ஸ்ரீபன் லெச்சே அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மேற்படி நிகழ்வில் "கனடா உதயன்" "யுகம் வானொ-லி" மற்றும் **Behind me Media International Group** ஆகிய ஊடக நிறுவனங்களின் முக்கியஸ்த்தர்கள் கலந்து கொண்டனர்.

## Liberal Candidate for Etobicoke North John Zerucelli seeks the support from Tamil Community of the Riding

# Etobicoke North தொகுதியின் லிபரல் கட்சியின் வேட்பாளர் John Zerucelli அவர்கள் தமிழ் பேசும் வாக்காளர்களின் ஆதரவை கோரி நிற்கின்றார்.



2025 ஏப்ரல் 28ம் திகதி நடைபெறவுள்ள கனடா பொதுத் தேர்தலில் மார்க் கானி அவர்கள் தலைமையில் அமையப் போகும் அரசின் அங்கத்தவர் ஆவதற்காக **Etobicoke North** தொகுதியில் லிபரல் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் **John Zerucelli** அவர்கள் தமிழ் பேசும் வாக்காளர்களின் ஆதரவை கோரி நிற்கின்றார்.

அண்மையில் அவரது பிரச்சார அலுவலகத்திற்கு தங்கள் ஆதரவைத் தெரிவிப்பதற்காக சென்றிருந்த நண்பர்கள் சோம சச்சிதானந்தன் மற்றும் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோர் அங்கு தமது ஆதரவைத் தெரிவித்து வேட்பாளர் **John Zerucelli** அவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.




# தீவிர தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபாடு காட்டும் மார்க்கம் — ஸ்ரோவில் தொகுதியின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி வேட்பாளர் நிரான் ஜெயநேசன்

எதிர்வரும் ஏப்ரல் 28ம் திகதி நடைபெறவுள்ள கனடாவின் பொதுத் தேர்தலில் பல வேட்பாளர்கள் தங்கள்தீவிர தேர்தல் பிரச்சாரப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டுள்ளார்கள் அவ்வாறானவர்களில் தமிழ் பேசும் அன்பரும் முன்னாள் பொலிஸ் அதிகாரியுமான மார்க்கம்-ஸ்ரோவில் தொகுதியின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி வேட்பாளர் நிரான் ஜெயநேசன் அவர்களும் தனது தொகுதியில் பிரச்சாரப் பணிகளில் தொண்டர்கள் மற்றும் நண்பர்கள் சகிதம் அக்கறையோடு செயற்படுகின்றார்.

சில நாட்களுக்கு முன்னர் அவரது தேர்தல் பிரச்சார அலுவலகத்திற்குச் சென்றிருந்த "தேசம்" மாதப் பத்திரிகையின் வெளியீட்டுக் குழு உறுப்பினரான ராம் சங்கர் சிவநாதன் அவர்கள் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த பின்னர் பத்திரிகையின் மார்ச் மாதப் பிரதியையும் வழங்கினார்.

# இலங்கை போர்க்குற்றவாளிகள் நான்கு பேர் மீது இங்கிலாந்து விதித்த தடைகளை கனடாவின் தமிழ் உரிமைகள் குழு (TRG) வரவேற்கின்றுத

இலங்கை போர்க்குற்றவாளிகள் நான்கு பேர் மீது இங்கிலாந்து விதித்த தடைகளை தமிழ் உரிமைகள் குழு (**TRG**) வரவேற்கிறது. மேலும் இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் பாரதூரமான குற்றங்களுக்குப் பொறுப்பான நபர்களுக்கு எதிராக இந்த உறுதியான நடவடிக்கையை எடுத்ததற்காக இங்கிலாந்து அரசாங்கத்தை எமது அமைப்பு (**TRG**) முழு மனதுடன் பாராட்டுகிறது.

இது தொடர்பாக மேற்படி கனட-ாவின் முக்கிய அமைப்பான (**TRG**) விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

பயணத் தடைகள் மற்றும் சொத்து முடக்கம் உள்ளிட்ட மாக்னிட்ஸ்கி கட்டமைப்பின் கீழ் இங்கிலாந்து விதித்த இந்தத் தடைகள், 'வேந்திர சில்வா (இலங்கை ஆயுதப் படைகளின் முன்னாள் தலைமைத் தளபதி), வசந்த கரண்ணகோடா (முன்னாள் கடற்படைத் தளபதி), ஜகத் ஜெயசூர்யா (முன்னாள் ராணுவத் தளபதி) மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் (முன்னர் விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கிய போராளி- பின்னர் அரசாங்கம் பக்கம் தாவி-யவர்) இன மோதலின் போது கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் அட்டூழியங்களுக்குப் பொறுப்பான இந்த நான்கு நபர்கள் மீதும் இங்கிலாந்து தடைகளை விதித்துள்ளது. (தொடர்ச்சி 17ம் பக்கம்)